RECEIVED 1989 -6-15 Periodicals Division

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 1 | துல்ஹஜ்ஜா 10 | இதழ் 28
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 15-06-1989

## ஜே.வி.பி.ஹர்த்தால் அசம்பாவிதம் இல்லை

(கொழும்பு)

இந்தியாவுக்கு எதிரான தமது போராட்டத்துக்கு ஆதரவாக ஜே. வி. பி.யினர் நேற்றுமுதல் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும் கொழும்பில் குறிப்பிடத்தக்க அளவில் அசம்பாவிதச் சம்பவங்கள் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை நடைபெறவில்லை.

இந்தியர்களுக்கு எதிரான ஜே. வி. பி. யினரின் அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து. கொழும்பில் தீவிர பாதுகாப்பு ஒழுங்கள் செல்யப்பட்டிருந்தன.

பாகாப்பு முன்னெச்சரிக்கையாக கொழும்பிலுள்ள இந்தியர்களின் கடைகள் நேற்று பூட்டப்பட்டிருந்தன. நடமாட்டமும் குறைவாகக் காணப்பட்டது.

## விரிவுரைகளுக்கு இன்று செல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள், விரிவுரைகளுக்கு இன்று செல்வார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

# ஒப்பந்தம் நிறைவேறும் வரை இந்தியப் படை வெளியேறாது!

## பிரதமர் ராஜீவ் திட்டவட்டமாக அறிவிப்பு

(பெங்களூர்)

**"இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றும் பொறுப்பு இந்தியாவுககு இருக்கிறது. ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படும்வரை எக்காரணம் கொண்டும் இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறாது" என்று இந்திப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி உறுதிபடக் கூறியுள்ளார்.**

அண்மையில் தம்மைச் சந்தித்த இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் திரு. பேர்னுட் திலகரட்னவுக்கு இந்தியாவின் நிலையைத் தெளிவாகத் தெரிவித்துவிட்டதாகவும் பிரதமர் காந்தி கூறினார். புதுடில்லியிலிருந்து நேற்று பெங்களூர் வந்து சேர்ந்த பிரதமர், விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே இத்தகவல்களைத் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது, அந்த நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணுவது போன்றவையே அமைதிப்

(8ம் பக்கம் பார்க்க)

## ஆழியவளை, இயக்கச்சியில் இருவர் சுட்டுக்கொலை

(மருதங்கேணி)

ஆழியவளையில் பாடசாலை மாணவர் ஒருவர் சுடப்பட்டு மரணமானார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

உடுதுறை மகாவித்தியாலய மாணவனான இளைய தம்பி மகேந்திரராஜா (வயது 17) என்பவரே சுடப்பட்டு மரணமானவராவார்.

ஓட முயற்சித்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. இவரது சடலம் மருதங்கேணி வைத்தியசாலையிலிருந்து உறவினர்களினால் கையேற்கப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

## "மாணவர் பாதுகாப்புக்கு கண்காணிப்புக் குழு வேண்டும்"

### பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக்குழு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''பாடசாலைக்குச் செல்லுகின்ற தமது பிள்ளைகள், உயிருடன் அல்லது தாக்குதல் ஏதுமின்றித் திரும்பி வருவார்களா என்ற ஏக்கத்துடன் பெற்றோர்கள் காத்திருக்கும் சூழ்நிலையே பரவலாகக் காணப்படுகிறது. இவ்வாறான உத்தரவாதமற்ற நிலையில், பாடசாலை மாணவர்கள் தமக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வேண்டி நிற்பது நியாயமானது.''

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஐந்து சந்தி சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப்பகுதியில் நேற்றிரவு ஏழு மணியளவில் பலத்த குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

சந்தியில் உள்ளகுளி பானக் கடையொன்றின் மீது குண்டுத்தாக்குதல் நடந்ததாகக் கூறப்படுகிறது. கடையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## கேள்விக் கொத்து நிரப்பியமுறையில் தவறுகள்

(நமது நிருபர் துவான் நஸீர்)

பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றுக்குறைகளை அறியத் தரும்படி கோரி கல்வியமைச்சு சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைத்திருந்த கேள்விக்கொத்தை பெருமளவு பாடசாலைகள் பிழையாகவே நிரப்பி அனுப்பிவைத்துள்ளமையால், புதிதாக வழங்கப்படவிருக்கும் ஆசிரிய நியமனங்களில் தாமதம் ஏற்படலாமெனக் கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் கேள்விக்கொத்தை உடனடியாக நிரப்பி அனுப்பிவைக்கவேண்டுமென்று பாடசாலைகள் கேட்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சுககு வந்து சேரும் வேகம் மந்தமாகவே உள்ளதாகவும் அறியப்படுகிறது.

[6ம் பக்கம் பார்க்க]

## யாழ்.செயலகம் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்- செயலக ஊழியர்கள் நேற்றும் வேலைக்குச் சமூகமளிக்காததால் செயலகம் முழுநாளும் மூடப்பட்டிருந்தது. நேற்று முன் தினமும் செயலகம் இயங்கவில்லை.

செயலகம் இயங்காதபோதிலும் வாகனங்களுக்கு 'பாஸ்' வழங்கும் வேலைகள் இந்திய அமைதிப்படையினரால் மேற்கொள்ளப்பட்டது. 'பாஸ்' பொறுவதற்காக நீண்டகியூ காணப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

## உணவுக் களஞ்சியங்களில் கோதுமை மா கையிருப்பில் இல்லை!

### யாழ். நகரில் திடீர் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள உணவுக்களஞ்சியங்களில் போதியளவு கோதுமை மா கையிருப்பில் இல்லாததால் கூட்டுறவுச் சங்கங்களிலும் மாவிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

உணவு முத்திரைக்குப் பொருள்கள் வழங்கப்பட்டு வரும் இவ்வேளையில் கூட்டுறவுச் சங்கங்களில் கோதுமை மா இல்லாததால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையிலிருந்து மா கப்பல் ஒன்று காங்கே

(8-ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆணையாளர் வேண்டுகோள்

(நெடுந்தீவு)

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் மா தட்டுப்பாட்டைத் தீர்த்து வைப்பதற்காக ப. நோ. கூ. சங்கங்கள் தமக்குத் தேவையான மாவை திருகோணமலை பிறிமா ஆலையில் பெற்றுவிநியோகிக்குமாறு வட-கிழக்குகூட்டுறவுஆணையாளர்

(8-ம் பக்கம் பார்க்க)

## அமைதிப்படை வெளியேறுவதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்: மகஜரும் கையளிக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

இந்திய அமைதிப் படை இலங்கையை விட்டு வெளியேறுவதை ஆட்சேபித்து மானிப்பாய், உடுவில், மருதனடமம் ஆகிய பகுதிகளில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோரடங்கிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இவ்வூர்வலம் மானிப்பாயிலிருந்து உடுவிலூடாக மருதனமடத்திலுள்ள இந்திய அமைதிப் படை முகாமிற்குச் சென்று மகஜரைப் பொது மக்கள் சார்பில் முன்னாள் அதிபரும், பிரஜைகள் குழு உறுப்பினருமான திரு. கே. அன்னப்பா இந்தியப் அமைதிப் படை உயர்அதிகாரியிடம் கையளித்தார்.

இவ்வூர்வலத்தில் அமைதிப்படை வெளியேறக்கூடாது வடக்கு-கிழக்கிலிருந்து சிறீலங்கா இராணுவம் வெளியேறவேண்டும்'' மாகாண சபைக்குரிய அதிகாரங்களை வழங்கு'' என்னும் கோஷங்கள் இடம்பெற்றன.

இவ்வூர்வலத்தில் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் யாழ். [illegible] திரு. [illegible] கலந்துகொண்டார்.

## கிளிநொச்சியில் 14 படையினர் பலி?

(கொழும்பு)

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று நடந்த மோதல் ஒன்றில் பதினைந்கு படையினர் பலியானதாக பி. பி. ஸி. நேற்றிரவு தனது செய்தியில் அறிவித்தது.

அதேநேரத்தில் இதுதொடர்பான தகவல் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்று இந்தியத் தூதரகம் தெரிவித்ததாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### நாவல்கள்

செங்கை ஆழியானின் நாவல்கள் மண்ணின் தாகம், திம் தரிகிட தித்தோம், ஓ அந்த அழகிய பழைய உலகம், அக்கினிக் குஞ்சு, ஆச்சி பயணம் போகிறாள், கடல் கோட்டை, விற்பனையாகின்றன. எல்லா பிரபல புத்தக சாலைகளிலும் கிடைக்கும் கமலம் பதிப்பகம், 82, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2932)

### தவறிவிட்டது

ஜெயசிறி கணபதிப்பிள்ளை 57, கல்லூரி வீதி, வண்ணார் பண்ணை, என்பவருடைய கடவுச்சீட்டும், அடையாள அட்டையும் G 0461745, 597462565V 14-6-1989, காலை யாழ்ப்பாணம், நல்லூர் பலாலிவீதி வசாவிளான் பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும்.
(சி 2956)

### விற்பனைக்கு

புதிய தமிழ் மொழிப் பயிற்சி ஆண்டு 5 புலமைப் பரிசில் விசேட சித்திக்கு வழிகாட்டி, வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம்.
(சி. 2950)

வட இந்தியா முறைப்படி சுத்தமாக தயாரிக்கப்பட்ட வெள்ளைப் பூடு அச்சார், தேசிக்காய் ஊறுகாய் எங்களிடம் கிடைக்கும். M. G. M. 777, K. K. S. Road, 208, 1st Cross st. Jaffna.
(சி 2930)

பதனிடப்பட்ட பம்பாய் வெங்காய விதை (Country of Origin Holland) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். கிளை; மல்லிகா ஸ்டோர், மாங்குளம்.
சி-2947

இறக்குமதியாக விருக்கும் (Holland, OR, U. K) விதை உருளைக் கிழங்கு தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2931)

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில்.
(சி 2726)

# பெப்ரவரி பொதுத் தேர்தல்: கண்காணிப்புகுழு அறிக்கை

(கொழும்பு)
''கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தல் சுமுகமான முறையில் நடந்ததாகவும் சில பகுதிகளில் மாத்திரம் முறை கேடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் 'சர்வ தேச பார்வையாளர் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

பொதுத் தேர்தலை கண்காணிக்க பத்து நாடுகளைச் சேர்ந்த 18 உறுப்பினர்கள் இலங்கை வந்து தேர்தல் அன்று நாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து நிலைமையை அவதானித்தனர். இதையடுத்து இக்குழு இது தொடர்பாக 53 பக்கங்களை கொண்ட அறிக்கை ஒன்றினை தேர்தல் அதிகாரி திரு. சந்திரானந்த டி சில்வாவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அந்தஅறிக்கையில் குழுவினர் மேலும் தெரிவிக்கையில்' இத்தேர்தலில் 63.96 வீதமானவர்கள் வாக்களித்துள்ளனர். இது ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பை விட 8 வீதம் அதிகமானது எனினும் சில பகுதிகளில் வாக்களிப்பு 20 வீதத்திலும் குறைவாகவே இருந்தது. இவ்விடங்களில் பல வாக்களிப்பு நிலையங்களில் ஒரு வாக்கேனும் பதிவு செய்யப்படாத இடங்களும் உண்டு.

நாட்டின் சில பகுதிகளில் தேர்தல் முறைகேடுகள் நடந்துள்ளது, இது எமது கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது. மக்கள் சில பகுதிகளில் பயத்தின் காரணமாக வாக்களிப்பில் ஈடுபடவில்லை, சில வாக்களிப்பு நிலையங்களில் பல வந்தமாக வாக்களிப்பு நடைபெற்றதும் அவ்வப் பகுதி அதிகாரிகள் எமது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்

(7ம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்தத்துக்கு 'ஈரோஸ்' கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
''இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இரண்டாம் கட்ட பேச்சுக்கள் தொடங்கவிருக்கும் இவ் வேளையிலாவது இந்திய அமைதிப் படையினர் நிரந்தர போர் நிறுத்தம் செய்ய வேண்டும்.''

இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமார் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்;

''இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தமிழ் மக்களுக்குப் பூரண பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற அடிப்படையில் ஆயுதம் கையளிப்பு செய்த எம்மீது ஏவிவிடப்பட்ட படுகொலைகள் ஒப்பந்தத்திற்கு முன்னுல் உள்ள சூழ்நிலைக்குச் செல்வதற்கே எம்மை உந்தித் தள்ளுகிறது.

''ஆகவே பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கும் இவ் வேளையில் அமைதிப் படையினர் ஆயுதக்களைவை நிறுத்த வேண்டும். நிரந்தரப்போர் நிறுத்தத்தை அறிவித்து அமைதி பேணுவதே தற்போதைய சூழ்நிலையில் பொருத்தமான செயலாகும்.

''அவ்வாறு இல்லாத பட்சத்தில் நிலைமை மேலும் மோசமடைந்து ஒப்பந்தத்திற்கு முன் இருந்த சூழ்நிலை உருவாக வழிவகுக்கும். ஒப்பந்தத்தின் பின் முன் எப்போதும் இல்லாத வகையில் எமது பாதுகாப்பு முற்றிலும் கேள்விக் குறியாகியுள்ளது. இதனை இக்கட்டத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேம்''. என்று தெரிவித்துள்ளார்,

இந்த ஆண்டில் கைதான, காணமல் போன தமது உறுப்பினர்கள் நிலைபற்றியும் திரு. வே. பாலகுமார் அறிக்கையில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

## தொலைதூரக் கல்வி: பத்திரங்களை சமர்ப்பிக்காதோர் உடன் அனுப்புமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய இருநூற்றெழுபது ஆசிரியர்களில் 148 பேர் மட்டும் தேவையான பத்திரங்கள் சமர்ப்பித்துள்ளார்கள்.

ஏனையோர் தாம் சமர்ப்பிக்காத பத்திரங்களை நேரடியாக தமிழ்ப்பிரிவு இணைப்பாளர், தொலைத்தூர கல்விச் சேவை, கல்வி அமைச்சு, இசுறுபாய பத்ரமுல்ல என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். உடன் அனுப்பிவைக்கப்படின் அவர்களது விண்ணப்பம் மீள் பரிசீலிக்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான ஆரம்பவகுப்பு ஜூலை முதலாம் திகதியளவில் வேம்படி மகளிர் பாடசாலையில் தொடங்கும் என அதன் சிரேஷ்ட விரிவுரையாளர் பண்டிதர் ம. செ. அலெக்சாந்தர் தெரிவித்துள்ளார்.

## பிரதேச அலுவலகம் மூலமாக சம்பளம்

(பண்டத்தரிப்பு)
யாழ், மலேரியா தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த மாதம் தொடக்கம் சம்பளப் பணம் யாழ்.பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம வழங்கப்பட்டுவருகின்றது.

இதுவரைகாலமும் கொழும்பிலுள்ள மலேரியா தடுப்பு இயக்க தலைமை அலுவலகத்திலுல் இவர்களது சம்பளம் வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. மாகாணசபையின் அதிகாரத்தின் கீழ் மலேரியா தடுப்பு இயக்கம் கொண்டு வரப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணம் கிளிநொச்சி பிரதேசங்களின் மலேரியா தடுப்பு இயக்கத்தின் நிர்வாகம் யாழ். பிரதேச சுகாதாரசேவை பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இவர்களது சகல கொடுப்பனவுகளும் யாழ். பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகம் மூலமே வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

## 31வது நாள் நினைவஞ்சலி

1989 - 05 - 13 அன்று நெடுங்கேணியில் படுகாயமடைந்து 1989 - 05 - 15-ல் அன்று மரணத்தைத் தழுவிய

**செல்லப் பெருமாள்**
அருமைராசா (நவம், டடி)
கொக்குத் தொடுவாய், முல்லைத்தீவு.

உன் உதிரத்தால் சிவந்த இம்மண்மீது, உன்இறுதி மூச்சுக்கலந்த காற்று புயலாக வீசட்டும். எங்கள் மக்களின் வீரக்கண்களை அவர்கள்பார்க்கட்டும். சோகக் குரலையும் அவர்கள் கேட்கட்டும். வானத்தின் தூய்மையோடு கம்பீரமாய் நின்றவனே, சுதந்திரத்திற்கான நியாயமான உந்தன் வாதங்கள் கடலின் குரலோடு கணீரென ஒலிக்கும் வரை இன்னல்களைத்தாங்கி இழப்புக்களை உயிர்ப்பிப்போம். செந்தமிழின் விடுதலைக்காய் செந்நீரைச் சிந்தி கல்லறைத் தெய்வங்களுக்கு காணிக்கையாக்குவோம்.

பெற்றோர்கள், நண்பர்கள்,
ஒட்டுசுட்டான் மக்கள்.

ஒட்டுசுட்டான்,
1989 - 06 - 15.
(சி 2949)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)
மீசாலை தெற்கு பன்றிக்கேணி கந்தசுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.
(கு)

## நன்றி நவிலல்

08 - 06 - 1989 வியாழன் எமது புதல்வர்கள் பிரம்மஸ்ரீ பி. ரவிசங்கர், பிரம்மஸ்ரீ ரகுராமன் ஆகியோரின் உபநயன வைபவத்தில் கலந்து ஆசியும், ஆதரவும் நல்கிய அனைவருக்கும் எம்மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேம்.

சோ. இ. பிரணதார்த்திஹரக்குருக்கள்
பி. சுகந்திகுந்தளாம்பிகை
வீரபத்திரர் கோவில், கோப்பாய் தெற்கு.
15 - 06 - 1989.
சி-2958

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**முத்துவேலு துரைரத்தினம்**
(பத்திரிகை நிருபரும், ஆங்கிலத் தட்டெழுத்தாளருமாவார்)
சபிண்டிகரணக் கிரியை: 16 - 06 - 89
தோற்றம்: 12 - 06 - 1938 மறைவு: 17 - 05 - 1989

திரைகடல் ஒடியே திரவியம் தேடி
வழமான வாழ்வை எமக்களித்தீர்
சித்தம் முழுதும் எமைச் சுமந்திருந்தீர்
ஈற்றில் எம்மை மறந்ததேனே?
காலன்தான் உம்மைக் கவர்ந்தானே?

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

ஊறணி, வல்வெட்டித்துறை.
(சி 2952)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**பொன்னையா செல்வரத்தினம் J. P. அவர்கள்**
(இளைப்பாறிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்)

மண்ணக மலர்வு: 02 - 10 - 1923 (இணுவில்)
விண்ணக நிறைவு: 17 - 05 - 1989 (ஆலங்குளாய், சண்டிலிப்பாய்)

17-05-89 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிரியை 15-06-89 வியாழக்கிழமை பகல் 12-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இதில் பங்கு கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரையும் அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றேம்.

மேலும், பலவகைகளிலும் உதவி புரிந்தோருக்கும் ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய்.
(சி 2937)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனுவில் மாணவர் தலைவர்கள் சரணடைவதாக பத்திரிகைகள் தகவல்

## எல்லைகள் மூடப்பட்டன

(பீக்கிங்)

**சீனுவில் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர் தலைவர்கள் பலர் தற்போது சரணடைந்து வருவதாக சீனப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. எனினும் இச் செய்திகள் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. இதேவேளை 21 மாணவ தலைவர்களைத் தேடி இராணுவமும், பொலிசாரும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.**

சீனுவில் கடந்த ஒருமாதகாலமாக இடம்பெற்ற ஜனநாயக ஆர்ப்பாட்டம் இராணுவ நடவடிக்கையால் சின்ன பின்னமாகிப்போயுள்ளது. ஆர்ப்பாட்டங்களில் முன்னணி வகித்த தலைவர்கள் தலைமறைவாகியுள்ளனர், பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். முக்கியமானவர்களை இராணுவம் தேடிவருகிறது.

முக்கியமாகக் கருதப்படும் சீனவிஞ்ஞானிகள் தம்பதிகள் தற்போது அமெரிக்கதூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களை தூதரகத்தைவிட்டு வெளியேறுமாறு சீன அரசு கேட்டுள்ளது. ஆனுல் இதனை அமெரிக்கா நிராகரித்துவிட்டது. இதையடுத்து இவர்கள் நாட்டைவிட்டுத் தப்பிச்செல்லாதவாறு சீன எல்லைகளை மூடியுள்ளது.

தஞ்சமடைந்தோர் விவகாரம் அமெரிக்க- சீன உறவைப் பெரிதும் பாதித்துள்ளது. தற்போது விஞ்ஞானிகள் தம்பதிகள் தஞ்சமடைந்துள்ள அமெரிக்க தூதரகத்தின்முன் சீன இராணுவம் எந்நேரமும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை மாணவர் ஆர்ப்பாட்டத்தை இராணுவரீதியில் சீனு அடக்கியதைக் கண்டித்து கனடா தனது தூதரக அதிகாரிகளைத் திருப்பிஅழைத்துள்ளது. இதேபோல் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் அங்கம் வகிக்கும் 12நாடுகளும் சீனஇராணுவநடவடிக்கையை வன்மையாகக் கண்டித்துள்ளன.

## உலக வலம்

---

### காங்கிரஸ் அ. தி. மு. க. கூட்டு

## ஜெயலலிதாவுக்கு சன்மானம் மூன்று கோடி ரூபா?

(சென்னை)

தமிழ்நாடு அ. தி. மு. கவுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் தேர்தல் கூட்டு உடன்பாடு ஏற்பட்டிருப்பதால், அதற்கு சன்மானமாக இந்திராகாங்கிரஸ், தமிழ்நாடு அ. தி. மு, க. தலைவி செல்வி ஜெயலலிதாவிற்கு மூன்று கோடி ரூபாய் வழங்க முடிவு செய்திருப்பதாக தமிழக ஏடு ''தராசு'' செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் ராஜிவ்காந்தியைச் சந்தித்தபின் திரும்பிய இரண்டு தினங்களில் செல்வி ஜெயலலிதாவிற்கு மத்திய இணையமைச்சர் பிரபுவின் மூலமாக ஒருகோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாக அவ் ஏடுமேலும் தெரிவித்துள்ளது.

செல்வி ஜெயலலிதா, லோக்சபை தேர்தலில் நாற்பது தொகுதிகளில் முப்பத்தைந்தை காங்கிரசிற்கு வழங்க இணங்கியிருப்பதால் கட்சிக்கு மூன்று கோடி ரூபா வழங்க இந்திரா காங்கிரஸ் முடிவுசெய்திருப்பதாகவும் அதில் ஒரு கோடி ரூபா உடனடியாக வழங்கப்பட்டதாகவும் அச் செய்தி தெரிவிக்கின்றது, (ச)

---

## இஸ்ரேலிய சிறைகளில் வாடும் 8, 500 பலஸ்தீனியர்

(ஜெருசலம்)

இஸ்ரேலிய சிறைகளில் சுமார் 8,500 பலஸ்தீனியர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தடுப்புக்கைதிகளுக்காக சிறைச்சாலைகளை விஸ்தரிக்க இஸ்ரேல் அரசு நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனியப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலியர்களை வெளியேற்றக்கோரும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டும், இஸ்ரேலிய இராணுவத்திற்கெதிராகத் தாக்குதல்களில் ஈடுபட்டதற்காகவுமே இவ்வாறு 8,500பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலைசெய்யுமாறுபலஸ்தீன இராச்சியத் தலைவர் யசீர் அரபாத் பல தடவைகள் வற்புறுத்தியுள்ளார்.

இதற்கிடையில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில்இருக்கும்பலஸ்தீனியப் பகுதிகளான மேற்குக் கரையோரம் ஹாசா நிலப் பகுதிகளில் தேர்தல்களை நடத்த இஸ்ரேல் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இஸ்ரேலின் இம்முயற்சியைப் பலஸ்தீனிய அரசு கடுமையாக எதிர்த்துள்ளது. இதுதொடர்பாக அமெரிக்கா, பிரான்சுடனும் பேச்சுக்கள் நடாத்தியுள்ளது.

மேற்குக் கரையோரம் ஹாஸா நிலப்பகுதியில்சுமார் இரண்டு லட்சம் பலஸ்தீனியர்களும் பலவந்தமாகக் குடியேறிய சுமார் எழுபதாயிரம் இஸ்ரேலியர்கள் இராணுவ பாதுகாப்புடன் இருக்கிறுர்கள்.

பலஸ்தீனியப் பகுதிகளில் உள்ள இஸ்ரேலியர்கள் வெளியேறியபின்னரே தேர்தல்கள் எதுவும் நடைபெறவேண்டுமெனப் பலஸ்தீனிய அமைப்பு கோரிவருவதும் குறிப்பிடத்தக்கது.

---

## தென்பகுதி தியேட்டர்களில் ஆங்கில, சிங்களப் படங்கள்

(கொழும்பு)

தென் பகுதி திரையரங்குகளில் தற்போது ஆங்கில, சிங்கள திரைப் படங்களே காண்பிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

அண்மையில் [illegible] விடுத்த பகிஷ்கரிப்பு [illegible] டிக்கைகளையடுத்தே பல திரையரங்குகளில் ஆங்கில-சிங்கள திரைப்படங்கள் காண்பிக்கப் படுகிறதாம்.

அரச திரைப்படக் கூட்டுத்தபானம் தற்போது தமிழ் [illegible] தகளுக்கு வழங்குவதையும் இடைநிறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

### முக்கிய உடன்படிக்கையில்

## சோவியத் - மே. ஜெர்மன் அதிபர்கள் கைச்சாத்து

(பொன்)

சோவியத் அதிபர் மிகையில் கொர்பச்சேவ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கை ஒன்றை மேற்கு ஜெர்மன் அதிபர் ஹெல்மட் ஹோலுடன் கைச்சாத்திட்டுள்ளார்.

மேற்கு ஜெர்மனுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு முதல் தடவையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு போய் சேர்ந்தார்.

இவரது இந்த விஜயத்தின் போது ஆயுதப் பரிகரணம், பேர்லின் சுவர் அகற்றுவது தொடர்பாகவும் மற்றும் பல விடயங்கள் குறித்தும் பேச்சுக்கள் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## முதல் கிரிக்கெட் டெஸ்ட் ஆஸ்திரேலியா வெற்றி

(லண்டன்)

ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் ஹெடிங்லீயில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி திறமையாக ஆடி 210 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸில் 7 விக்கெட் இழப்பிற்கு 601 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்ரீபன் வோக் ஆட்டமிழக்காது 177 ஓட்டங்களையும், ரெய்லர் 136 ஓட்டங்களையும், டீன் ஜோன்ஸ் 79 ஓட்டங்களையும், அணித்தலைவர் அலன் போடர் 66 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 430 ஓட்டங்களைப்பெற்றது. இதில் அலன் லாம்ப் 120 ஓட்டங்களையும் பேர்னுட் 80 ஓட்டங்களையும் பெற்றனர். ஆஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்பிற்கு 230 ஓட்டங்களை பெற்று நான்காம்நாள் ஆட்டத்தை முடித்துக்கொண்டது.

இறுதி நாளில் ஒதுக்கப்பட்ட 86 ஓவர்களில் வெற்றி பெற 402 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் ஆடிய இங்கிலாந்து அணி எதிர்பாராத விதமாக சகல விக்கெட்டுகளையும் இழந்து 191 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

---

## பயிர் பீடை நோய் விவசாயத் திணைக்களம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பயிர்களுக்கு ஏற்படக்கூடிய பீடை நோயைத் தடுத்து நிறுத்துவதற்கு விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த விவசாயப் போதனுசிரியர்கள், விவசாயிகள், கிராமசேவை அலுவலர் ஆகியோர் யாழ். விவசாயத் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென யாழ். விவசாயத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் தமது பகுதி விவசாயப் போதனுசிரியர்களுக்கு இது தொடர்பாக சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளதாவது;

எமது மாவட்ட விவசாயிகள் செய்கைபண்ணும் பயிர்களுக்கு செய்கையைப் பாதிக்கக்கூடிய அளவில் பீடை நோய்த் தாக்குதல் விவசாயினுடைய முயற்சி வீண்போகும். ஆதாயம் குறையும். தளர்வு ஏற்படும். பொருளாதாரரீதியாக பெரும் நஷ்டம் ஏற்படும்.

இவ்விடயத்தில் எமது திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும். இன்று எமது திணைக்கள உத்தியோகத்தர் அணியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றத்தை மனதிற்கொண்டே இவ்விடயத்தின் அவசியத்தை வற்புறுத்த விரும்புகின்றேன். அதாவது, விவசாய விரிவாக்க சேவை உத்தியோகத்தர்கள் எம்மிடமிருந்து பிரியும் இச் சந்தர்ப்பத்தில் விவசாயிகளுடன் தொடர்புகொள்ளவேண்டிய பொறுப்பும் உங்கள் தோள்

(6-ம் பக்கம் பார்க்க)

---

### ''ஊழல் விசாரணை பற்றிய

## ஜனுதிபதி ஆணைக்குழுவை கலைத்ததன் மர்மம் என்ன?''

(கொழும்பு)

''ஊழல் ஒழிப்புப்பற்றி அடிக்கடி பேசும் இந்த அரசாங்கம் ஊழல்கள் தொடர்பாக விசாரணை செய்யவென நியமிக்கப்பட்ட விசேட ஜனுதிபதி ஆணைக்குழுவைஅது விசாரணைகளைத் தொடங்கிய சிறிது காலத்திற்குள்ளேயே கலைத்துவிட்டது. இதன் மர்மம் என்ன?''

இவ்வாறு சுதந்திரக் கட்சி உறுப்பினர் திரு. சி.வி. குணரத்ன பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினுர்.

ஒத்திவைப்புப் பிரேரணையின்போது கேள்வி எழுப்பிய திரு. குணரத்ன மேலும் கூறியதாவது:-

''இந்த ஆணைக்குழு முன்னிலையில் ஓரிரு வழக்குகளே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்னும் மூவாயிரத்துக்கு அதிகமான வழக்குகள் விசாரணைக்குக் காத்திருக்கின்றன. ஒரு கூட்டுத்தாபனத்தின் தலைவரின் நடத்தைகள் தொடர்பான விசாரணைகள் தொடங்கப்பட்டவேளையிலேயே ஆணைக்குழு கலைக்கப்பட்டது. மக்கள் இதனைப்பற்றிச் சந்தேகத்துடன் பேசிக்கொள்கிறுர்கள். ஊழல்களை ஒழிக்கவேண்டுமென்ற நோக்கம் அரசுக்கு இருக்குமானுல் மேற்படி விசேட ஜனுதிபதி ஆணைக்குழுவை உடனடியாகக் கூட்டவேண்டும்.''

**மணிவாக்கு**

கடவுளோடு கடலிலும் செல்லலாம். அவர் இல்லாமல் வாயிற் படியையும் தாண்டவேண்டாம்.

— ரஷ்ய பழமொழி.

## நமது நோக்கு

# மின்சாரம் திருடாமை நன்று!

வளர்ந்துவரும் விஞ்ஞானம் தந்த பெரும் நன்மைகளில் ஒன்று மின்சாரம் இயற்கை வளத்தால் கிடைத்த நிலக்கரி, பெற்ரோல் போன்றவற்ருல்இயந்திரங்களைஇயக்கிவந்த மனிதருக்குமின்சாரம் கிடைத்தது பெரும் வரப்பிரசாதமாகிவிட்டது. வாழ்க்கையின் கபோகங்கள் பலவற்றை அனுபவிக்க அது வழிவகுத்துள்ளது.

எமதுபகுதியின் இயற்கை வளக்குறைவால் நீர்மின் சாரம் பற்றி நினைக்கவே முடியாதுள்ளது. கடல்அலையின் சக்தியைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கலாம் என்கிருர்கள், ஆனல் அவ்வாறு பெறும் மின்னின் உற்பத்திச் செலவைக் குறைக்கவும், புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தவும் மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இப்படியெல்லாம் எமது பகுதியின் எதிர்காலம் பற்றிச் சிந்தனைகள் பலருக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில், பத்திரிகைகளில் வரும் பல மின் செய்திகள் மின்தாக்கைக் கொடுக்கின்கின்றன; உற்சாகத்தை உறைய வைக்கின்றன.

சமூகத்திலேயுள்ள சிலரின் சில சுயநலப்போக்குகள் முழுச் சமூகத்திற்குமே கேடு விளைவிக்கின்றன. மின்சாரத் திருட்டைச் செய்பவர்கள் அதனல் மற்றவர்களுக்கு விளையும் கேடுகளைப் பற்றிக் கொஞ்சமாவது சிந்திக்கிருர்களா?

திருட்டு மின்சாரத்தால் மின் வலு குறைகிறது. சில மின்சார உபகரணங்கள் பயன்படுத்த முடியாதுள்ளன. சிலவேளைகளில் அவை பழுதடைகின்றன. படிக்க வேண்டிய மாணக்கர்கள் போதிய ஒளியின்றித் தவிக்கிருர்கள். இவைபற்றியெல்லாம் சிந்திப்பார் யார்?

''மின்சார சபை ஊழியர்கள் என்ன செய்கிருர்கள்?'' இப்படியும் கேட்பவர்கள் இருக்கிருர்கள். பகலிலே நடக்கும் திருகுதாளங்களைவிட, இரவிலே தான் மின் திருட்டு அதிகம் நடைபெறுவதாகச் செய்திகள் கூறுகின்றன, விசேட வீடியோ படங்களுக்குமாத்திரமன்றி, இரவிலே வயர்களைப் பொருத்தி நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்குகிருர்கள். இரவில் நடமாட முடியாத மின்சார சபை ஊழியர்கள் என்ன தான் செய்யமுடியும்?

எனவேதான் பொதுமக்கள் இந்த விஷயத்தில் மின் ஊழியர்களுக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

இதைவிட இன்னுமொரு செய்தி வந்துள்ளது. மின்சாரம் பாய்ந்துகொண்டிருக்கும் வேளையிலும் தூணேறி, பெறுமதிமிக்க கேபிள்களை வெட்டமுயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. பொதுமக்கள் திரண்டு திருடனைத் துரத்தி விட்டனர். எனினும் 'காலம் கருதி இடத்தாற்' கருமம்ஆற்றி, 'தவம்செய்வார் தம் கருமம்செய்வார்' என்பதுபோல் தன்காரியத்தைச் சாதித்துவிட்டான்!

இதன் விளைவு என்ன? அந்தக் கிராமத்திற்கே மின் விநியோகம் இல்லை ஒரு சுயநலமியால், முழுக்கிராமமே இருளினிற் கிடந்து துன்பம் அனுபவிக்கவேண்டியுள்ளது.

யாழ். மாநகரசனப ஆணையாளர் தனதுகடமையைப் பொறுப்பேற்றதும். எமது பத்திரிகைக்கு அளித்த போட்டியில் கூறியது என்ன; ''யாழ். மாநகரசபை ஆண்டு தோறும் மூன்று கோடி ரூபா மின்சாரத்தால் நட்டமடைகிறது. மின்சாரத் திருட்டாலும், மின்பாக்கியைக் கட்டாமல் விடுவதாலுமே இத்தொகை பெருகி வருகிறது!!– இவ்வாறு குறைப்பட்டார்;

நாட்டு நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கி இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மிகுந்த கண்டனத்துக்குரியவர்கள், கலங்கிய நிலையில் மின் பிடிப்பவர்களைப் பொது மக்கள் தான் மேலும் விழிப்பாயிருந்து பிடிக்கவேண்டும், பொதுச் சொத்தைச் சுயநலமிகள் சொந்தச் சொத்தாக்க முற்படுவதை யாரும் விரும்பமாட்டார்கள்.

# மானிப்பாய் அந்தோனியார் உற்சவம்

(பண்டத்தரிப்பு)

பிரசித்திபெற்ற மானிப்பாய் புனித. அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 9ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. எதிர் வரும் 17-ம்திகதி சனிக்கிழமை நற்கருணை வழிபாடும், மறு நாள்18-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 5-45 மணிக்கு திருப்பலியும், 7-15 மணிக்கு திருவிழா திருப்பலியும். அதனை தொடர்ந்து திருச்சொருப பவனியும் நடைபெறவுள்ளது.

## வெங்காய உற்பத்தி

[அராலி]

அராலிப் பகுதி விவசாயிகள் தற்போது வெங்காய உற்பத்திச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வெற்றிடமாக உள்ள வயல் நிலங்களை உழுது பண்படுத்தி, வெங்காயம் நடுவதில் கவனம் செலுத்திவருகின்றனர்.

## கொத்தணி அதிபர்கள் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டக் கல்விப் பகுதியுள் அடங்கும் கொத்தணி அதிபர்களுக்கான கூட்டம் இன்று 15ம் திகதி யாழ். கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

## ஊழல் அம்பலம்!

# உரக் கூட்டுத்தாபனத்தில் $13\frac{1}{2}$ கோடி ரூபா செலவாம்!

## ஆண்டறிக்கையில்குளறுபடி

(ஸி. துவான் நஸீர்)

இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் கடந்தகால நடவடிக்கைகளில் பல ஊழல்களும், குறைபாடுகளும் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. பதின்மூன்றரைக்கோடி ரூபாவுக்கு மேல் செலவுகளுக்கான நடவடிக்கைகளுக்கு எதுவித ஆதாரங்களும் இக்கூட்டுத்தாபனத்திடம் இல்லையெனத் தெரிய வருகிறது.

இதேநேரம் பல லட்சக் கணக்கானகண்டறியப்படாத கொடுக்கல் வாங்கல்களும், இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகளும் கடந்த காலங்களில் காணப்பட்டுள்ளன.

அண்மையில் இலங்கை உரக்கூட்டுத்தாபனத்திஞல் வெளியிடப்பட்டுள்ள1986ம்ஆண்டுக்கான அதன் வருடாந்தஅறிக்கையில் காணப்படும் தரவுகள் தகவல்களிலிருந்து இதனைக் கண்டுகொள்ள முடிகிறது. மேலும் இக்கூட்டுத்தாபனத்துக்கு 1986ம் ஆண்டுக்கான அறிக்கையைத் தயாரிக்க இரு ஆண்டுகள் தேவைப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கதாகும்.

இக்கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கோட்பாடுகள், கணக்குகளிலுள்ள விடுகைகள், கணக்குகளிலுள்ளமிகைக் கூற்றுக்களும், குறைக்கூற்றுக் களும், இணங்கச் செய்யப்படாத கட்டுப்பாட்டுக்கணக்குகள் போதிய அளவில்சான்றுபடுத்தப்படாத கணக்குகளில் உள்ள விடயங்கள், கட்டுப்படியாத கொடுக்கல்வாங்கல்கள், கண்டறியப்பட்டநட்டங்கள், கணக்குகளில் நம்பகத்தன்மை இன்மை, கட்டுப்பாடுகளின் போதாமைஆகியவற்றைக் குறைகளாகச் சுட்டிக்காட்டியுள்ள கணக்காளர் நாயகம் ''இக்கணக்குகள்மீது நான் அபிப்பிராயம் எதனையும் தெரிவிக்கமுடியாத நிலையில் உள்ளேன்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் 1986ம் வருடத்துக்கான ஆண்டறிக்கையின்படி 13 கோடியே 32 லட்சத்து 35 ஆயிரத்து 920 ரூபா பெறுமதிக்கு கணக்காய்வுக்கான சான்றுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. வியாபாரக் கடன் பெறுநர்கள் கணக்கில் 6 கோடியே 36 லட்சத்து 67 ஆயிரத்து 358 ரூபாவுக்கும், பிறகடன் பெறுநர்கள் கணக்கில் 31 லட்சத்து 81ஆயிரத்து 945 ரூபாவுக்கும், சில்லறைக் கடன் தருநர்கள் கணக்கில் 2 கோடியே 28 லட்சத்து 65 ஆயிரத்து 368 ரூபாவுக்கும், பிறகடன் தருநர் கணக்கில் 56 லட்சத்து 51 ஆயிரத்து 93 ரூபாவுக்கும் எதுவித உறுதிப்படுத்தல் சான்றுதல்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. செலவினங்கள் தொடர்பாக 32 லட்சத்து 615 ரூபாவுக்கு பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொண்டமைக்கான சான்றுதல்கள் இல்லை. மேலும் திரட்டிய நிதியத்துக்கு உதவு தொகையாக 22 லட்சத்து 20 ஆயிரம் ரூபா அனுப்பியது தொடர்பாக எதுவிதஅறிவித்தல்களும் காட்டப்படவில்லை.

### வடக்கு-கிழக்கிலும்...

திருகோணமலை, காங்கேசன் துறை, மட்டக்களப்பு மாவட்ட உரப்பண்டகசாலைகளின் ஒரு கோடியே 5 லட்சத்து 80 ஆயிரத்து 165 ரூபா பெறுமதியான இருப்புகளின் உருப்படி சரிபார்த்தல் சான்றுதல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக ''சான்றுதல்கள் இல்லாததன் காரணமாக பல கணக்குகளை திருப்திகரமாக உறுதிப்படுத்தவோ, ஏற்றுக் கொள்ளவோ முடியவில்லை'' என கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மூவாயிரத்து 552 ரூபாவுக்கான வங்கி நேரடிப்பற்று, 7 கோடியே 57 லட்சத்து 5 ஆயிரத்து 609 ரூபாவுக்கான இறக்குமதி உண்டியல்கள், ஒரு கோடியே 21 லட்சத்து 59 ஆயிரத்து 510 ரூபாவுக்கான எதிநிலை நியமம் ஆகியவற்றுக்கான கொடுக்கல்வாங்கல்கள் பற்றி இதுவரை கண்டறியப்படவில்லை. 1977ம் ஆண்டில் ஏற்பட்ட தீவிபத்திஞல் எரிக்கப்பட்ட தொடர்புடைய பதிவேடுகள் இல்லாத நிலையில் இக்கொடுக்கல் வாங்கல்களைக் கண்டறிவது சாத்தியமானதாக இல்லை என இக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் இவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அட்டகிரி முருகன் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நவாலி அட்டகிரி முருகன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த எட்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், திங்களன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

பாடசாலைகளில்

# விருப்பத்திற்குரிய பாடம் கற்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதுமான சகல பாடசாலைகளிலும் விருப்பத்துக்குரிய பாடமாக பாளி, அரபு, சிங்களம் தமிழ் என்பவற்றை போதிக்கவென கல்வி அமைச்சு புதிய நடைமுறையொன்றை செயல்படுத்தவுள்ளது. அதே நேரம் சகல பாடசாலைகளிலும் சாரணர், கெடற் ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பிலும் இது அமுல் செய்யப்படலாம் என அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

புதிய நடைமுறையின்படி தற்போது சிங்களப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தமிழ்மொழி அறிவு இருக்குமாஞல் அவர்கள் அப்பாடசாலைகளில் தமிழ் கற்பிக்க ஏற்பாடு செய்யப்படும். அதேபோல தமிழ் பாடசாலைகளில் கற்பிக்கும் தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களில் சிங்களமொழி அறிவு உள்ள ஆசிரியர்களைக் கொண்டு சிங்களம் போதிக்கவும் அமைச்சு தீர்மானித்துள்ளது. இதே அடிப்படையில் பாளி, அரபு ஆகிய மொழிகளும் பாடசாலைகளில் போதிக்கவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்களில் சாரணர், கெடற் பயிற்சி பெற்றிருக்கும் ஆசிரியர்கள் அந்தந்த பாடசாலைகளில் அத்துறையில் கற்பிக்கும் ஆசிரியராக நியமிக்கப்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றுக்காக இவ்வாசிரியாகளுக்கு மேலதிக கொடுப்பனவுகள் கொடுக்கவும் கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

(து)

### பூதங்கள் தோறும் நின்ருட்சி புரிவாள்

விண்ணில் நின்றெழு நாதம தாகி
வீசு தென்றலின் பரிசமுணர்ந்து
எண்ணில் அக்கினி முன்ஞெளி கண்டு
ஏற்கும் நீருள சுவையை அறிந்து
மண்ணில் மணம்மிகு மாட்சியைச் செய்வாள்
மாண்பு பெறும் பெரும் பூதங்கள் தோறும்
இன்ன வகையென இருந்து சிறப்பாள்
எங்கள் நாக பூஷணி அம்மாள்

— நாக. சண்முகநாதபிள்ளை.

(இன்று நயினை நாகபூஷணி அம்மாள் 11-ம் திருவிழா)

## பலதும் பத்தும்

### அங்குமா கலைஞர்கள்?

அரசியலிலே கலையுலகத்தவர்கள் இடையிடையே ஆக்கிரமித்து விடுகிருர்கள். ''வேலைக்காரி'' என்றபடத்திற்குக் கதை வசனம் எழுதியவர் அறிஞர் அண்ணு: 1967ல் முதலமைச்சராஞர். அவரைத் தொடர்ந்து புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.: மீண்டும் கலைஞர்.

கலைஞருக்கு இன்றும் தலையிடி கொடுத்துவரும் எதிர்க்கட்சித் தலைவியே சினிமாவில் நடித்தவர். ஆந்திராவிலும் நடிகர் என். டி. ராமராவ் முதலமைச்சர். அமெரிக்காவிலும் இரு தடவைகள் ஜஞதிபதியாக இருந்த றேகனும் சினிமா நடிகராகப் புகழ்பெற்றவர்.

எமது நாட்டிலும் திரு. டீ. பீ. இலங்கரத்ஞ சிறந்த சினிமாக்கதை எழுத்தாளர். ஏன்? இன்றைய ஜஞதிபதியும் நாடகக் கதை எழுத்தாளர்.

இன்று, 40 ஆண்டு காலத்திற்குப் பின் போலந்தில் ஓரளவு சுதந்திரத் தேர்தல் நடைபெற்றுள்ளது. அதிலே பல புதிய முகங்கள் சொலிடாறிற்றித் தொழிற்சங்கச் சார்பில் வெற்றியடைந்துள்ளார்கள்.

அவர்களில் ஒருவர் சினிமா டைரக்டர்! அங்குமா கலைஞர்கள் அலைவீசத்தொடங்கியுள்ளது?

-- வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பல்கலைக்கழக மாணவர் கைது தொடருமானால் பிரச்னை தீராது"

## சபையில் சுதந்திரக்கட்சி எம். பி. கூற்று

(கொழும்பு)

"பல்கலைக்கழகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வட கொழும்பு மருத்துவக் கல்லூரியை அரசுடைமையாக்கிவிட்டால்மட்டும்போதாது. பல்கலைக்கழகப் பிரச்னையின் ஒரு பகுதி மட்டுமே இதன்மூலம் தீர்க்கப்படுகிறது. இலவசக் கல்வியை இந்த நாட்டிலிருந்து அகற்றிவிடக்கூடாது."

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் பேராசிரியர் கமல் கருணநாயக்கா பாராளுமன்றத்தில்உரையாற்றுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"பல்கலைக்கழகங்கள் அனைத்தினதும் சகல பிரச்னைகளையும் கவனத்தில்கொண்டு தீர்க்க முயலவேண்டும். வட கொழும்பு மருத்துவக் கல்லூரியை அரசுடைமையாக்கிய பின் அதன் அனுமதிகள் நிர்வாக நடவடிக்கைகள் யாவும் ஒரு ஒழுங்குமுறையில் பேணப்படவேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்கள் எப்போதும் சந்தேகக் கண்கொண்டே நோக்கப்படுகின்றனர். ஆனல் அவர்கள் வெள்ள நிவாரணத்துக்கு நிதிசேகரித்து அகதிகளுக்கு உதவிகள்செய்து கொண்டிருக்கிருர்கள். மாணவர்கள் அடிக்கடி காணமல் போகிருர்கள்; கைதுசெய்யப்படுகிருர்கள். இந்த நிலை தொடரும்பட்சத்தில் பிரச்னைகளைக் கடைசிவரை தீர்க்கமுடியாமலும்போகலாம்.

### விரிவுரையாளர்களுக்கு நியாய சம்பளம்வேண்டும்

"பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் நிலைமையையும் நாம் சிந்திக்கவேண்டும். விரிவுரையாளர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படுவதில்லை. பஸ்களிலேயே அவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு வருகிருர்கள். இவர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படவேண்டியதுடன் ஏனைய வசதிகளும் செய்துகொடுக்கப்படவேண்டும்."

# அரசு வாக்குறுதிகளை மீறினல் அரசுக்குள் அரசு தோன்றும்

## தினேஷ் எச்சரிக்கை

திரு. தினேஷ் குணவர்த்தன பேசுகையில் கூறியதாவது:-

"இளைஞர்கள் கைதுசெய்யப்படமாட்டார்கள், காணமல்போகமாட்டார்கள், மகாபொலநிதி அதிகரிக்கப்படும் என்றெல்லாம் அரசு அளித்த வாக்குறுதிகள் எதுவுமே இன்று நிறைவேற்றப்படவில்லை.

"வடகொழும்பு மருத்துவக் கல்லூரிக்கு நஷ்டஈடுகொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது. உண்மையில் நாட்டைக் கொள்ளையடித்த இவர்களிடமிருந்துதான் அரசு நஷ்டஈடு கோரவேண்டும்.

"களனிப் பல்கலைக்கழகத்துடன் இக்கல்லூரி இணைக்கப்படும்போது ஒரு பூரணமான மருத்துவப்பீடமாக மாற்றியமைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

### அரசுக்குள் அரசு உருவாகும்

"அரசின் வாக்குறுதிகள் அடிக்கடி மீறப்படும்போது இந்த நாட்டில் அரசுக்குள் அரசுகள் உருவாகலாம் என்பதை எச்சரிக்கையாகக் கூறுகிறேன்.

### இலக்கம் இல்லாத வாகனங்கள் என் காரைப் பின்தொடர்கின்றன

"இலக்கங்கள் இல்லாத வாகனங்கள் கொழும்பில் ஓடுகின்றன. இவை மாணவர்களைக் கடத்துவதற்குப் பயன்படுகின்றன. என் காரையே இலக்கம் இல்லாத வாகனங்கள் பின்தொடர்வதைக் கண்டிருக்கிறேன். இலங்கையின் எதிர்காலத்தை நாசமாக்கும் நடவடிக்கைகளை எடுக்காதீர்கள். குறுகிய அரசியற் கொள்கைகளை நிறுத்த முயற்சிக்காவிட்டால் பிரச்னைகளைச் சட்டங்களால் தீர்க்கமுடியாது.

"சீனவில் பீக்கிங்கில் மாணவர்கள் போராட்டத்தை ரூபவாஹினியில் அரசு காட்டுகின்றது. காட்டவேண்டாம் என்று கூறவில்லை. இவற்றைப் பார்க்கும் நம் நாட்டு இளைஞர்கள் இதனைப்போன்றே கொதித்து எழுகிருர்கள். இந்நிலை தொடராமல் இருக்கவேண்டும் என அரசு விரும்புவதாக இருந்தால் அதற்கு ஏற்றவிதமாகப் பல்கலைக்கழகங்களினதும், நாட்டினதும் பிரச்னைகளைத் தீர்க்க வழிசெய்யவேண்டும். சமூகத்தில் சிறுபகுதி மக்கள் மட்டும் அனுபவிக்கும் வசதிகளைச் சகலருக்கும் கிடைக்கச் செய்வதே புத்திசாலித்தனமான காரியமாகும்.

நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் தனியார்துறை 'இன்ஸ்டிடியூட்கள்' என்ற பெயரில் கொள்ளையடிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் ஆய்வுகளை செய்ய அனுமதிக்கப்பட்டது போல பல்கலைக்கழகங்களுக்கு இத்தகைய ஆய்வுகளை நடத்த வசதி செய்யப்படவில்லை. அதற்கான வசதிகள் பல்கலைக்கழகங்களில் இல்லை. எனவே பல்கலைக்கழக மட்டங்களில் இந்த ஆய்வுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். வடக்கு கிழக்கு மாணவர்கள் தெற்கு மாணவர்கள்என்றபேதமின்றி முழு இலங்கைக்கும் பொருத்தமான கல்விவசதியை அளிப்பதுடன் அவர்கள் சுதந்திரமாக செயற்பட வாய்ப்பளியுங்கள்.

# "அதிக மருத்துவ பீடங்களை அரசு திறக்க வேண்டும்"

களுத்துறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்ணண்டோ பேசுகையில் கூறியதாவது:

உலகில் உள்ள எந்தப் பல்கலைக்கழகங்களிலும் சென்று படிக்கக்கூடிய தகுதியும் ஆற்றலும் உள்ள நம்நாட்டு இளைஞர்கள் நம்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பிரவேசிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர் இந்த துர்ப்பாக்கிய நிலையை போக்க மேலும் கூடுதலான மருத்துவப் பீடங்களை திறக்க வேண்டும். வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் நம்நாட்டு மாணவர்கள் தமது திறமைகளை அங்கு வெளிக்காட்டியுள்ளனர். இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் எண்ணிக்கையைக் குறைக்க சோவியத் யூனியன் முயல்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அங்கு சென்று கல்விகற்றநம்நாட்டு மாணவர்களுக்கு இங்கே வேலைவாய்ப்பு வழங்க அரசு தயக்கம்காட்டுகிறது. இதனுல்தான் இந்நடவடிக்கையை எடுக்க சோவியத் யூனியன் முயற்சிக்கிறது. எனவே இது பற்றி அரசு கவனம் செலுத்த வேண்டும்.

### 500 டாக்டர்களுக்கு வேலை இல்லை

நாடுமுழுவதும் டாக்டர்களுக்கு பற்ருக்குறை நிலவுகிறது 500 டாக்டர்களுக்கு பற்ருக்குறை காத்துக் கொண்டிருக்கிருர்கள் இவர்களுக்கு அப்பதவிகளை உடனடியாக வழங்க வேண்டும்.

வடகொழும்பு மருத்துவக் கல்லூரியை அன்று எதிர்த்த போதிலும் ஒருவிடயத்தில் அதனை பாராட்டவும் வேண்டும்அங்குநல்லமுறையில்மாணவர்களுக்கு போதனை நடத்தப்பட்டிருந்தது. இங்கு படிப்பை இடையில் விட்டுவிட்டு வெளிநாட்டுக்குச் சென்று கல்வி கற்கும் மாணவர்களின் தொகை அதற்குச் சான்றுபகர்கிறது. எனவே மருத்துவத் துறையில் கூடுதலான மாணவர்கள் அனுமதி பெறுவதற்கான கூடுதலான மருத்துவ பீடங்களை ஏற்படுத்துவதுடன் ஸ்ரீஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியையும் அதற்காக பயன்படுத்தவேண்டும்.

## ஆணையாளருக்கு மகஜர்

(பண்டத்தரிப்பு)

மாதகலில் அமைந்துள்ள இறைச்சிக்கு மாடுவெட்டும் நிலையத்தை அங்கிருந்து வேறு இடத்திற்கு அகற்றுமாறு விபுலானந்தர் படிப்பகம் யாழ். பிரதேச ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

பொது விளையாட்டு மைதானத்திற்கென்று ஒதுக்கப்பட்ட காணியில் இந்த இறைச்சிக்கு மாடு வெட்டும் நிலையம் செயற்பட்டுவருவதால் மைதானத்தைப் பயன்படுத்தமுடியாது இருப்பதாகவும், அயலிலுள்ள காணிகளில் விவசாயம் செய்ய முடியாது விவசாயிகள் பாதிக்கப்படுவதாகவும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெட்டப்படும் யாடுகளின் கழிவுப் பொருள்களைச் சரிவரப் புதைக்காமல்விடுவதால் நாய்கள், காகங்கள் என்பன அவற்றைத் தூக்கிக்கொண்டு சென்று அயலிலுள்ள வீடுகளில் போடுவதாகவும், இதனுல் துர்நாற்றம் இப்பகுதியில் வீசுவதாகவும் மேற்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மகஜரை மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தின் சார்பில் அதன்செயலாளர் திரு. ச. வல்லிபுரம் யாழ். பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## நிர்வாகிகள்

(சுன்னுகம்)

உடுவில் கொத்தணிப் பாடசாலைகளின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திருமதி எஸ். எஸ். குமாரசாமி. செயலாளர் [illegible] கமலநாதன்.

# இப்படியும் நடக்கிறது

சில தினங்களுக்கு முன்னர் காரைநகரிலுள்ள ஒரு கல்லூரியில் அளிக்கப்படும் மதிய போசனம் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

அதாவது, குறிப்பிட்ட இக்கல்லூரியில் வெள்ளிக்கிழமை தோறும் சோறும் கறியும் மட்டுமல்ல, பாயாசமும் வழங்கப்படுகிறது என்று உங்களுக்குச் சொல்லி வைத்தேன்.

இப்பத்தியில் இடம்பெற்ற மேற்படி விஷயத்தை அந்த உயர் அதிகாரி பார்த்தாரோ இல்லையோ ...... நேரில் பாராட்டவேண்டும் என்று நினைத்து, நேராக அந்தக் கல்லூரிக்கே போய்விட்டார்.

அதிபரை அணுகினர். "அது சரி...உங்களால் எப்படி சோறும் கறியும் கொடுக்க முடிந்தது. கட்டுப்படியாகுமா? என்று மூக்கில் விரலை வைத்துக்கொண்டார்.

"...இது அப்படி ஒன்றும் பெரிய விஷயமில்லை என்னுடைய கல்லூரியில் சுமார் ஆயிரம் மாணவர்கள் உள்ளனர். இலவச மதிய போசனத் திட்டத்துக்கு ஆளுக்கு மூன்று ரூபா வீதம் மூவாயிரம் ரூபாவரை கிடைக்கிறது. அரிசியைக் கணக்குப் பார்த்தால் கிட்டத்தட்ட ஆயிரத்து ஐநூறு ரூபா முடிகிறது. மிகுதிப் பணத்துக்கு காய்கறி, பாயாசப் பொருள்கள் என்று வாங்குகின்றேன். இதுமட்டுமல்ல; சமையலுக்காக மூன்றுபேரை ஆளுக்கு எழுபத்து ஐந்து ரூபா சம்பளம் கொடுத்து வைத்திருக்கின்றேன்..." என்ருர் அதிபர்.

"நல்ல முயற்சி. எனது பாராட்டுதல்கள்..." என்று மனந்திறந்து கூறிவிட்டு விடைபெற்ருர்.

அந்த உயர் அதிகாரி வேறு யாருமல்ல; யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அவர்கள்தான்.

சபாஷ் பெற்ற கல்லூரி காரைநககர் யாழ்ரன் கல்லூரி, எமது வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

"ஊடுருவி"

# சேவையால் உயர்ந்த கோபாலரத்தினம்

திரு. கிருஷ்ணபிள்ளை கோபாலரத்தினம் கடமையின்போது இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி எனக்குத் தெரிவிக்கப்பட்டபோது அதிர்ச்சி அடைந்தேன்.

நான் அமரர் கோபாலரத்தினத்தை "அண்ணன்" என்றே அழைத்தேன். அவரின் நண்பர்கள் அவரைக் 'கோபால்' என்றே அழைத்தனர். அவர் என்னைத் "தம்பி" என்றே அழைப்பார்.

திருவாளர் கோபாலரத்தினம் யாழ்ப்பாணத்துக் கொக்குவிலில் புகழ் பூத்த குடும்பத்திலே பிறந்து, படித்துப் பேராதனைப் பல்கலைக்கழகத்துப் பட்டதாரியானர். அவர் காலத்துப் பட்டதாரிகளுள் ஒருவர் முன்னைய யாழ் மாவட்ட மந்திரியும், தற்போதையப் பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ பூ. பி. விஜயகோனும் ஆவார்.

இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் வகுப்பைச் சேர்ந்த அமரர் நாட்டின் பல பாகங்களிலும் காரியாதிகாரியாகவும், உதவி அரசாங்க அதிபராகவும், மேலதிக அரசாங்க அதிபராகவும் பணி புரிந்தார். இறுதியில் வடக்கு-கிழக்கு மகாண சபை அவரின் கல்வி, அனுபவம், ஆற்றலை அறிந்து அவருடைய சேவையைக் கோரவே, மத்திய அரசு அவரை அங்கு பணி செய்ய விடுவித்தது. மாகாண சபை பொதுநிர்வாக, உள்ளூராட்சி, அத்துடன் மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டார்.

காரியாதிகாரியாகவும் உதவி அரசாங்க அதிபராகவும் இருந்ததனுலே பொது சன உறவு, தொடர்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்தார்.

வடமராட்சி மக்கள் 1987 இல் இடம்பெயர்ந்த கஷ்டத்திற்குள்ளானபோது, உணவு விநியோகம் சீராக நடைபெற உறுதுணையாக நின்றதற்கு நன்றிப் பெருக்குடையவர்களாவோம்.

பணிமனை நேரத்துக்குள் நின்று கடமை புரியாதவர். அவர் கடமை நேரத்துக்கப் பாலும் சேவைகளை வழங்கினுர். மக்கள் தம் நன்றியைத் தெரிவிக்கும் ஓர் அடையாளச் சின்னமாக, அன்னுர் கட்டுக்குளம்பற்று பிரிவில் குச்சவெளியில் கடமையாற்றிச் சென்றபோது ஒரு புதிய கிராமத்திற்கும் "கோபாலபுரம்" என்ற நாமம் சூட்டினுர்கள்.

அமரர் பொதுசன அபிப்பிராயத்திற்கு மதிப்பு அளித்தவர். எவர் சொன்னுலும் அவர்கள் கூறுவதை மிக உன்னிப்பாகக் கரிசனையுடன், விசுவாசத்துடன் செவிமடுப்பார். விடயங்களைக் கவனிப்பார். நல்ல அவதானயாகவும் செயற்பட்டார்.

பதவிகளால் பெருமை பெறலாம்; பதவி வகிக்க வந்த அப்பதவிகள் பெருமை பெறலாம். அன்னுர் கோபாலரத்தினம் இரண்டாம் வகையினர். மனிதப்பிறவி எடுப்பவர்களெல்லாம் மனிதர்களா? இவரில் ஒரு மானுடனைக் கண்டேன்.

சாவுக்கு சாட்டுண்டு. கடமையின்போது இன்றும் வாழ வேண்டிய வயதில் மாரடைப்பால் எம்மை விட்டு நீங்கினுர். இவரின் திடீர் இழப்பு பொதுசன சேவைக்கும், தமிழ் மக்களுக்கும், குடும்பத்தினர்க்கும், நண்பர்கட்கும் பேரிழப்பாகும்.

அவர் இழப்பால் வேதனையுற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாங்களும் துக்கத்தைப் பகிர்ந்து கொள்கிறேம். அன்னுரின் புண்ணிய ஆத்மா இறைவன் பாதத்தில் சாந்தி அடைவதாக.

**சி. த. மார்க்கண்டு**
(இ. நி. சே. சிரேஷ்ட உதவிச் செயலாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்வுக்கு

## சிரசாசனம்

விரிப்பை மடித்து அரை அங்குல மொத்தம் இரண்டடி சதுரம் இருக்க வேண்டும். விரிப்பை சுவரோரமாக விரித்து அதன் ஓரமாக முழங்கால்களில் இருந்து கைகளைக் கோத்து முழங்கைகளை மட்டமாக நிலத்தில் அமர வைத்து புறங்கைகள் சுவரோரமாக வைத்து குனிந்து தலையின் பிடரியை கோத்த கைகளில் படவைத்து உச்சம் தலை நிலத்தில் படிய வைக்கவும், முழங்கால்களை உயரத்தூக்கி குதிக்கால்களையும் முன்கால்களையும் ஒரு உன்னுதல் போட்டு மேலெலுப்பி முன் கால்களை தொடையுடன் அணைத்து தொடைகளை மேல் தூக்கி கால் விரல், உள்ளங் கால், குதிக்கால் இவைகளை சுவருடன் அணைத்து கால்களால் சுவரைத் தொட்டுக் கொண்டு மேலே எழுப்ப வேண்டும். தலைகீழும் கால் மேலுமாக நிற்க வேண்டும். கால்கள் உயரத்தூக்கும்போது சுவாசத்தை வெளிவிட்டபடி தூக்க வேண்டும். நிமிஷம் 15 சுவாச வீதம் நிற்க வேண்டும். முடிந்ததும் கால்களையும், தொடையுகளையும் மடித்துகீழிறங்கி ஆரம்ப நிலைக்கு வந்து உடனே நிலத்தில் கால்களை நீட்டி நிமிர்ந்து படுத்து ஓய்வெடுக்கவும் 5 நிமிடம் தலைகிழாய் நின்றால் 1 நிமிஷம் ஓய்வு எடுக்க வேண்டும். இதே மாதிரி 2 கிழமை பழகி பின் சுவரை விட்டு ஓர் அடி தள்ளி நின்று செய்யவேண்டும். பின் இரண்டடி தள்ளி நின்று செய்து பழகி வந்தால் கஷ்டமில்லாமலும் உழுக்கு, சுளுக்கு இல்லாமலும் பழகலாம். எந்த இடத்திலும் நிற்கும் தன்மை வந்து விடும். ஆரம்பத்தில் 1 நிமிடம்தான் நிற்கவேண்டும். மாதம் போகப் போக நிமிஷத்தைக் கூட்டிக்கொண்டு போகலாம். 5 நிமிஷம் வரை நிற்கலாம். சிரசாசனம் செய்கிறவர்கள் முக்கியமாக உறைப்பு, கோப்பி, புகைபிடித்தல, மதுபானம், போதைப் பொருள் கட்டாயமாக விலக்க வேண்டும். சிரசாசனம் சூடானது மேல் குறிப்பிட்டவைகளும் சூடானவை உடம்புக்கு வேதனையைக் கொடுக்கும்.

## சிரசாசனத்தின் பலன்

என் சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம். எங்கள் தலை ரெலிபோன் வீடு அதிலிருந்துதான் பல வீடுகளுக்கும் தந்தி பேசப்படுகிறது. தந்திக் கம்பிகளும் அதற்குரிய காந்தமும் சரியாக இருந்தால் சுறுசுறுப்பு, ஞாபகசக்தி நரம்பு நோய்கள் வராது. பொய், களவு, சூது, காம வெறி இவைகளை அகற்றும், தாய் தந்தையர்களுக்கு கீழ்ப்படிந்து நடப்டார்கள். முக்காலத்தை உணரும் தன்மை உணர்ந்து வழிநடத்தும மூளை நல்லறிவும் வளர்ச்சியும் ஏற்படுகின்றன. உயரம் கட்டையானவர்கள் சிரசாசனம் செய்தால் வளர்ச்சியடைவார்கள். சிரசாசனம் செய்தால் உமிழ்நீர் அதிகம் ஊறி சர்க்கரை ஜீரணிக்க வைக்கிறது. நீரிழிவு வியாதியைப் போக்குகிறது. தடித்த நரம்புகள் மாறுகின்றது. இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்தி இருதயத்திற்கு நன்மையளிக்கிறது.

இதன் நன்மை சர்வாங்காசனத்திலும் உண்டு. கண் ஒளி பிரகாசம் பெறும். தலைவலி தீரும். தலைவலி இருக்கும் போது செய்யக்கூடாது. மூலவியாதி சுகம் வரும். சிரசானத்தில் அதிக நன்மைகள் உண்டு சிரசாசனம் யோக ஆசிரியரின் உதவியுடன் செய்யவேண்டும். உடம்பின் நிலை அறிந்து செய்ய வேண்டும். மூளைக்கு அடியிலிருக்கும் பிட்யூட்டரி, பீனியல் பாடி இவ்விரு கோளம்களும் சரிவர இயங்குங் நன்மை சிரசாசனத்திற்கு உண்டு.

## ஏகபாத ஆசனம்

சிரசாசனம் செய்தால் அதற்கு துணை ஆசனமான ஏகபாத ஆசனம் செய்ய வேண்டும். (வளரும்)

சுவாமிஜி
ஸ்ரீ சிதானந்தயோகி

# வட்டு. கொத்தணி போட்டி: அராலி இந்து சாதனை

(அராலி)

வட்டுக்கோட்டை கொத்தணி அமைப்புக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. சி. டாஸ் தலைமையில் நடைபெற்றது.

47 நிகழ்ச்சிகள் இடம்பெற்ற கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெறவுள்ள இப்போட்டியில் அராலி இந்துக்கல்லூரி 21 நிகழ்ச்சிகளில் முதலாமிடத்தைப் பெற்று வட்டுக்கோட்டை கொத்தணி அமைப்பில் பெரும் சாதனையை நிலைநாட்டியுள்ளது.

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட கொத்தணிகளுக்கு இடையே நடைபெற்றுள்ள மெய்வல்லுநர் போட்டியில் அராலி இந்துக் கல்லூரி 21 முதலிடங்களையும், வட்டு. இந்துக் கல்லூரி 18 முதலிடங்களையும், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் 5 முதலாம் இடங்களையும், வட்டு. திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் 2 முதலாமிடங்களையும், வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலயம் ஒரு முதலாமிடத்தையும் பெற்றுள்ளன.

# விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் மன உறுதியோடு இயங்கவேண்டும்

(அராலி)

''மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்த விளையாட்டு போட்டிகள் பேருதவி புரிகின்றன. விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் கட்டுப்பாடுகளை மீறுது ஒழுக்க சீலர்களாகத் திகழ்ந்து வெற்றி பெற வேண்டுமென்ற மன உறுதியோடு இயங்க வேண்டும். வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதித்து வாழவும் பழகிக்கொள்ள வேண்டும்.''

இவ்வாறு அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராசரத்தினம் கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

திரு. எஸ். சிவராசரத்தினம் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:

''மாணவர்கள் ஒவ்வொருவரும் கல்வி கற்பதுபோல விளையாட்டுப் பயிற்சியையும் பெற்றுக் கொள்ளவேண்டும். மாணவர்களுக்கு கல்வியும் விளையாட்டும் இன்றியமையாதவை. விளையாட்டுப்பயிற்சி உடல் உறுதியையும் மன அமைதியையும் தந்து ஆரோக்கிய வாழ்வு வாழ உதவுகின்றது'' என்றார்.

வட்டுக்கோட்டை கொத்தணி அமைப்பு நிர்வாக அதிபர் திரு. சி. டாஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

திரு. சி. டாஸ்உரையாற்றும் போது: ''விளையாட்டுத்துறைக்கு இப்போது நல்ல மதிப்பு ஏற்பட்டுள்ளது. விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு நல்ல பெயரைப் பெற்றுக்கொள்வோருக்கு சென்ற இடமெல்லாம் மதிப்பு இருக்கின்றது. நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் திகழவேண்டுமானால் சகல மாணவர்களும் விளையாட்டுத்துறையில் ஈடுபடவேண்டும்'' என்றார்.

இப்போட்டியில் அலைமகள் இல்லம் முதலாவது இடத்தையும் கலைமகள் இல்லம் இரண்டாவது இடத்தையும் மலைமகள் இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன.

# ஆயுள்வேத வைத்தியர் பரீட்சை: பெறுபேறு வெளியிடத் தாமதம்

[யாழ்ப்பாணம்]

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஆயுள்வேத வைத்தியர்களுக்கான இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகளை உடன் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு வட இலங்கை ஆயுள்வேத வைத்தியர் சம்மேளனம் சுதேசவைத்தியஅமைச்ருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

லங்கா ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியிலிருந்துகடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களுக்கு இதுவரை பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை.

ஒரு மாத காலத்தினுள் வெளியிடப்படும் இந்த முடிவுகள் பல மாதங்களாகியும் வெளியிடப்படாதது குறித்து நேற்று நடைபெற்ற வைத்திய சம்மேளனத்தின் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளில் ஏற்பட்டுள்ள ஆயுள்வேத வைத்தியர்களுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க இந்தப் பரீட்சார்த்திகளால் முடியாதிருப்பதாகவும் சம்மேளன அமைப்பாளரும், கல்லூரி உப அதிபருமான டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி நேற்றைய கூட்டத்தில் கவலை தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கொத்தணிப்பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் நேற்றுமுன்தினம்ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று 15-ம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளைக் கிளிநொச்சி மாவட்ட உடற்கல்வி அதிகாரி திருமதி எஸ். சூரியமூர்த்தி சிறப்பான முறையில் செய்துள்ளார்.

பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் [illegible] ரம் கலந்து கொள்கிறார்.

# யாழ். - பரு. கோஷ்டிகளின் உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியும் - பருத்தித்துறை உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியும் இம்மாதம் 18-ம் திகதி நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மைதானத்தில் மோதிக் கொள்ளும்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையில், மாவட்டத் தெரிவுக் கோஷ்டிகளிடையே தற்போது நடைபெற்றுவரும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியிலேயே மேற்படி இருகோஷ்டிகளும் மோதுகின்றன.

இப்போட்டி கடந்த மாதம் 25-ம் திகதி நெல்லியடியில் நடைபெறுவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் யாழ். கோஷ்டி மைதானத்துக்கு சமூகம் கொடுக்கத் தவறிவிட்டது.

இதுசம்பந்தமாக இரு லீக்குகளுக்குமிடையில் நடைபெற்ற கடிதத் தொடர்புகளின பின்பே ஆட்டத்திற்கான புதிய திகதி நிர்ணயிக்கப்பட்டது.

## உதைபந்தாட்டப் பயிற்சி

யாழ். உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டிக்கு தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி எதிர்வரும் வெள்ளியும், சனியும் ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுமென, உதைபந்தாட்டப் பயிற்சியாளர்களான திரு. எம். டி. தம்பிராசாவும், திரு. ஏ. எஸ். மனுவலும் தெரிவித்தார். (வி)

## கேள்விக் கொத்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சருக்கு கிடைத்துள்ள நிரப்பப்பட்ட கேள்விக் கொத்துக்களிலும் பெரும் பிழைகள் காணப்படுவதனால் ஆசிரியர் நியமன வேலைகள் தாமதப்படக் கூடிய சூழ்நிலை காணப்படுவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த ஆசிரிய நியமனங்கள் உதவி அரசாங்க அதிபர் மட்டத்திலேயே வழங்கப்படவுள்ளது. எனினும் பெரும்பாலான பாடசாலைகள் தாம் அனுப்பி வைத்துள்ள கேள்விக் கொத்தில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை குறிப்பிடவில்லை. சிலகேள்விக் கொத்துக்களில் பாடசாலை அமைந்துள்ள இடத்தின் பெயர் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் 274 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன. இதில் இல்லாத பெயர்கள் குறிப்பிட்டிருப்பது குறித்து அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் விசனம் தெரிவித்தார். மேலும் பல பாடசாலைகள் தமக்கு அவசியமில்லாத பாடங்களையும் ஆசிரியர்களையும் பற்றி எதுவித குறிப்பும் தரவில்லை. உதாரணமாக தமிழ் முஸ்லிம் பாடசாலைகளில் பௌத்த மதம் போதிக்கும் ஆசிரியர், முதலான விடயங்கள் பற்றி எதுவித குறிப்புகளும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

அதே நேரம் தமக்கு இத்தகைய வினாக்கொத்து கிடைக்கவில்லை என பல பாடசாலைகள் அமைச்சுக்கு கடிதம் எழுதியுள்ளன. இத்தகைய பாடசாலைகள் தமக்கு அண்மையில் உள்ள பிரதேசக் கல்விக் காரியாலயங்களில் இருந்து வினாக் கொத்தை பூரணப்படுத்தி அனுப்பும்படியும், தேவையான அளவு முன் கூட்டியே அவை அங்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இக்கேள்விக் கொத்தை நிரப்பி அனுப்பாத பாடசாலைகளுக்கு பற்றாக்குறையான ஆசிரியர்களை நியமிப்பது முடியாத காரியமாக இருக்கும் எனவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன, (து)

## பயிர் பிடை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் சுமத்தப்பட்டுள்ளது. நீங்கள் இம் மாற்றத்தை பொறுப்புணர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். உரிய முறையில் செயலாற்றவேண்டும்.

ஆகவே, மிக அவதானத்துடன் செயற்பட்டு உங்கள் பிரிவு பாடவிடய உத்தியோகத்தர்கள், விவசாய உத்தியோகத்தர் ஆகியோருடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் உடனுக்குடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென வற்புறுத்திக்கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அண்மையில் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முடிவின் படி எமது திணைக்களத்தில் சிராமமட்டத்தில் கடமை புரிந்த விவசாய விரிவாக்க சேவை உத்தியோகத்தர்கள் உள்நாட்டமைச்சின் கீழ் கிராமசேவை உத்தியோகத்தர்களாகநியமனம்பெறுவதை தொடர்ந்து இச் சுற்றுநிருபத்தை அனுப்பிவைத்துள்ளதாகவும் இச்சந்தர்ப்பத்தில் விவசாயிகளும் இதுவிடயத்தில் அவதானத்துடன் செயற்பட்டு விவசாயப் போதனாசிரியர்களுடன் முடிந்தஅளவு தொடர்புகொள்வதும் முக்கியம் என்றும் உதவிப் பணிப்பாளர் தெரிவிக்கிறார்.

# இராசி பலன்

**15-06-1989**

ஏகாதசி காலை 8-42 வரை சுவாதி இரவு 11-58 வரை கரிநாள் அமிர்தயோகம் இராகுகாலம் 1-23 257 வரை ஸர்வநிர்ஜல ஏகாதசிவிரதம் அவசரகருமங்கள் செய்யலாம்.

மேஷம்: தொழில்குறைவு, மனோதிடம், குடும்பத்தில் கருத்துவேற்றுமை, பணச் செலவு காதல் பிரிவு.

இடபம்: கவலையடைதல், குடும்பப்பிரிவு, தொழில் பிணக்கு பயணங்களால் செலவு கடமை தவறல்.

மிதுனம்: தொழில்செய்யுமிடத்தில் மனவேறுபாடு போராட்டம், குடும்பஅமைதியின்மை சகோதரர்பகை.

கடகம்: குடும்ப வெறுப்பு, மக்களால் கவலை, தொழில் நஷ்டம், பணமுடை அந்நியர் சகாயம்.

சிங்கம்: புதியபதவி பணச் செருக்கு, தொழில்லாபம் குடும்பமகிழ்ச்சி, சுபசெய்தி, நண்பர்உதவி.

கன்னி: விவாகப்பேச்சுக்கள் தடைப்படும் அதிககவலை அலைச்சல், குழப்பம் பெரியோர் பகை வீண்பெயரெடுத்தல்,

துலாம்: சென்றஇடத்தில் சிறப்பு, குடும்பமகிழ்ச்சி விருந்துபசாரம் சுபகாரியம் தொழில்லாபம்.

விருச்சிகம்: புத்திதடுமாறும் தொழில்மேடு அயலவர்பகை கடும்கோபம் குடும்பச் சண்டை,

தனுசு: முகத்தில் மலர்ச்சி பயணங்களால் காரியம் கைகூடும். மகளிர் நேசம் கடிதஉறவு மனநிறைவு.

மகரம்: ஏமாற்றம் பொருள் இழப்பு, மனைவியால் துன்பம் தாயார் உதவி எதிர்பாராத தொல்லை.

கும்பம்: நீண்டநாள் பகை விலகும், குடும்பசுகம், நண்பர்கள் வருகை, தொழில் லாபம் சுபநிகழ்வு.

மீனம்: குழம்பிய நிலை அதிகாரிகள் தொல்லை கடன் சுமை இராஜபயம் அதிக யோசனை சோம்பல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "1983 ஜூலை கலவரம் போல நிகழ விடமாட்டோம்

## தமிழர்கள் அஞ்சவேண்டாம்'

## ஜே. வி. பி. உறுதி

(கொழும்பு)

''1983 ஜூலைக் கலவரம் போல மீண்டும் ஒரு கலவரம் வந்துவிடுமோ என்று தமிழ் மக்கள் அஞ்சவேண்டாம். அப்படியான ஒரு நிலைக்கு யாரும் தூண்டுகோலாக இருந்தால் அவர்களுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி உடனடியாக நடவடிக்கை எடுக்கும்''

எக்ஸத் லங்கா ஜனதா பக்ஸயவின் உறுப்பினரான திரு. ஜே. பி. ஏ. அருளையா கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. அருளையா கடந்த பொதுத்தேர்தலில் எக்ஸத் லங்கா ஜனதா பக்ஸயவின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டவர்.

இவர் தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சநிலை காரணமாக ஜே. வி. பி. யின ருடன் தொடர்புடைய வட்டாரங்களிலிருந்து மேற்குறிப்பிட்ட உறுதிமொழியைப்பெற்றிருந்ததாகவும்" அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''மக்கள் விடுதலை முன்னணி இப்பொழுது ஆரம்பித்துள்ள போராட்டம் தமிழ் மக்களுக்கு எதிரானபோராட்டம் அல்ல; இந்திய அரசாங்கத்திற்கும் இந்தியாவின் விஸ்தரிப்பு வாதத்துக்கும் எதிரான போராட்டமே என்றும்; இந்திய அமைதிப்படை வெளியேறியதும் இந்தியாவுக்கு எதிரான போராட்டமும் நிறுத்தப்பட்டுவிடும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரண்டு தடவைகள் தபால் சேகரிப்பு

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் பிரதம தபால்நிலைய தபால் விநியோக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தபால் சேகரிப்பு இருதடவைகள் நடைபெறுகின்றது.

கடந்த சில வருடங்களாக நாட்டில் இருந்துவந்த சீரற்ற நிலைமைகளால் தபால் சேகரிக்கும் வேலை தினமும் ஒரு முறை மட்டுமே நடைபெற்று வந்தது.

கடந்த 11ம் திகதி திங்கட்கிழமை முதல் காலையும் மாலையுமாக இரு தடவைகள். யாழ். நகரப் பகுதிகளில் தபால்கள் சேகரிக்கப்படுகின்றன.

ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலை 10 மணிக்கு ஒரு தடவையும் பிற்பகல் 2-30 மணிக்கு ஒரு தடவையுமாக தினமும் இரண்டு தடவை தபால் சேகரிப்பு நடைபெறுகிறது. தபால் சேகரிப்பு முன்னர் நகரில் மூன்று தடவைகள் நடைபெற்றது குறிப்பிடந்தக்கது.

# பணம் பொருள்

## உற்பத்திக் கருத்தரங்கு

(வண்ணார்பண்ணை)

பணம் பொருள் உற்பத்திகள் தொடர்பான கருத்தரங்கொன்று பனை அபிவிருத்திச்சபையில் நடத்தப்பட்டது.

இச்சபையின் சந்தைப் படுத்தும் பிரிவு அலுவலகத்தில் சபையின் விரிவாக்கப் பிரிவு உத்தியோகத்தரினுல் இக் கருத்தரங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சபையின் செயலாளர், திரு. கிருஷ்ணமூர்த்தி, கணக்காளர் திருமதி பி. அருள்ராஜ், அபிவிருத்தி உத்தியோகத்தர், திரு. எஸ். கோகுலதாசன், சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர் திரு. வி. திவ்யராசா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். இச்சபையின் உற்பத்திப் பிரிவைச் சேர்ந்த போதனாசிரியர்கள், உற்பத்திப் பிரிவு உத்தியோகத்தர்கள் இக் கருத்தரங்கில் சமுகமாயிருந்தனர்' சபையின் தலைவர் திரு. க. நடராசா இக் கருத்தரங்கிற்கு அனுப்பிவைத்த விசேட செய்தியும் இக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்டது.

சபையின் பணிப்பாளர்கள் திரு. எம். எஸ். அலக்சாந்தர், திரு. எஸ். பாலசிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

கருத்தரங்கில் பனைஓலை நார், ஈர்க்கு ஆகியன தொடர்பான உற்பத்திகள் பற்றியும், இவற்றின் விலை நிர்ணயம் பற்றியும், உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குதல் பற்றியும் ஆராயப்பட்டன. ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் வந்த சபையின் போதனாசிரியர்கள் உற்பத்தி தொடர்பான தமது கருத்துக்களை இக் கருத்தரங்கில் முன்வைத்தனர்.

# "வடக்கு மாகாண மக்களின் பாதுகாப்பு சரியான முறையில் பேணப்படாவிட்டால் மேற்குநாட்டு அமைதிப்படை இலங்கைக்கு வரும்!"

## நவசமசமாஜ கட்சி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

''வடக்கு-கிழக்கு மக்களின் பாதுகாப்பு சரியானமுறையில் பேணப்படாவிட்டால் அவர்கள் மீண்டும் மத்தியஅரசாங்கத்தின் கொடுமைகளை அல்லது வேறு அந்நியஇராணுவத்தின் தலையீட்டை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். ஐ.தே.க. அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சமாதானப்படை என்றபோர்வையில் மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளுக்கு சார்பான இராணுவத்தை வரவழைக்கக்கூடும்.''

இவ்வாறு நவசமசமாஜக் கட்சி சார்பில் அதன்பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

### இனவாத சக்திகளே காரணம்

இந்திய இராணுவம் இலங்கையை விட்டுச் செல்ல இருக்கின்றது என்ற செய்தி நாட்டின் இறைமையை மதிக்கும் எந்தவொரு பிரஜையையும் மகிழ்ச்சியடையச் செய்யும். இந்திய இராணுவத்தைஇங்கு வரவழைத்தது ஐ.தே.க. அரசாங்கமே. அதற்குத் தேவையான துர்ப்பாக்கியமான நிலைமைகளை உருவாக்கியது இனவாத சக்திகளே. தமது பலவீனமான அரசைக் காப்பாற்றிக் கொள்வதையே பிரதான நோக்கமாகக்கொண்டு இந்திய இராணுவத்தை வரவழைத்த இந்த அரசாங்கம் அதன் விளைவாக சம்பந்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட துன்பதுயரங்களுக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

தற்பொழுது வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கத்தினுல் அமைக்கப்பட்டிருக்கும் பிரஜைகள் தொண்டர் படை மக்களின் பாதுகாப்பிற்குப் போதுமானதல்ல. மாகாண சபை அமைந்த நாள் முதல், அவ்வரசாங்கம் மேலும் விசாரிக்கப்படவேண்டும் என்று நாம் ஆலோசனை கூறியிருந்தோம், எல்லா மக்கள் பிரிவினரதும் நம்பிக்கையைப் பெறக்கூடிய பாதுகாப்புப் பிரிவு அமைக்கப்படல் வேண்டும் என்பதும் எமது கருத்தாகும்.

### தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக

வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண அரசாங்கம் ஒன்றினை ஏற்படுத்துவதற்குநாம் எப்போதும் செயற்பட்டு வந்துள்ளோம், மேலும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாப்பதற்கும் நாம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் போராடியுள்ளோம்.

தமிழ்பேசும் மக்களின் தலைவிதி அந்நிய இராணுவத்தினரால் அன்றி அம்மக்களாலேயே நிர்ணயிக்கப்படவேண்டும்.

### பெப்ரவரி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

நாட்டிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 20 மாவட்டங்களுக்கு கண்காணிப்பு குழுவினர் விஜயம் செய்திருந்தனர்.

### வழிகாட்டல் கருத்தரங்கு

(வடமராட்சி)

தேவரையாளி இந்துக்கல்லூரியின் முறைசாராக்கல்விப் பிரிவு தொழில் வழிகாட்டல் என்னும் விடயம் பற்றி கருத்தரங்கு ஒன்றை இன்று நடத்தவுள்ளது.

கல்லூரியின் பயிற்சி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் முறைசாராக் கல்வி வெளிக்கள உத்தியோகத்தர் திரு. எஸ். சிதம்பரநாதன் சிறப்புரை ஆற்றுவார்.

0 0 0

(சுன்னுகம்)

இம்மாதம் பத்தாம் பதினேராம் திகதிகளில் யாழ் மாவட்ட ரீதியில் நடைபெற இருந்த மெய்வல்லுநர் போட்டி விதிமுறைகள் பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் 16ம் 17ம் திகதிகளில் காலை 9 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்துசமுத்திரபாதுகாப்புக்கு அமைதிப்படை அவசியம்

## ஈழமாணவர் பொதுமன்றம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''வடக்கு - கிழக்கு அமைதிக்கு மட்டுமல்லாது இந்து மகா சமுத்திரப் பிராந்தியத்தை ஏகாதிபத்திய வல்லரசுகளின் நாசகார நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்கவும் இந்திய அமைதிப்படையின் சேவை அத்தியாவசியமானது.''

இவ்வாறு ஈழமாணவர் பொதுமன்றத்தின் நிறைவேற்றுக் குழு சார்பில் திரு. கே. சாரங்கன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழமாணவர்களாகிய நாம் கடந்தகால அனுபவங்களிலிருந்து எமது எதிர்காலத்திற்கான பாதையைச் செப்பனிட வேண்டியவர்களாக உள்ளோம். கடந்தகால விடுதலைப் போராட்டமானது ஈழதேச மாணவர்களுக்கும், மக்களுக்கும் நிறையப் பாடங்களைக் கற்றுத் தந்துள்ளது. எந்தவொரு போராட்டத்திலும் மாணவர்களது சக்தியானது முக்கியத்துவம் பெற்று விளங்கும் அதேவேளை முற்போக்குத் தன்மை மிக்கதாகவும் விளங்குகிறது. இந்திய அமைதிப்படை எமது மண்ணில் காலடி பதிக்க[illegible] அவசியத்தையும், வரும்போது இருந்த நிலைமையையும் நாம் ஒரு காலமும் மறந்துவிடலாகாது.

எம்மக்களைச் சொந்த மக்களாசக் கருதி, போர் அழிவுகளிலிருந்து இயன்றவரை பாதுகாத்து, காத்திரம்மிக்க சேவையை இந்திய அமைதிப்படை செய்துவருவதை யாரும் மறந்துவிடமுடியாது. அழிக்கப்பட்ட பாடசாலைகள் எமக்குத் திருத்தித் தரப்பட்டன. சிறிலங்கா இராணுவம் அபகரித்த பாடசாலைகள் மீட்டுத் தரப்பட்டன. சமூக விரோதிகளின் அச்சுறுத்தல்களிலிருந்தும் குழப்பங்களிலிருந்தும் பாதுகாத்து நாம் 'பருவத்தே பயிர்செய்ய' உறுதுணையாக இருந்துவருவதையும் மறந்துவிடக்கூடாது.

கடந்தகாலத்தில் சிறிலங்கா அரசின் மாற்றுந்தாய் மனப்போக்கும், இனவெறிச் செயற்பாடுகளும் எமது வடக்கு-கிழக்குப் பிரதேசத்தைச் சீரழிவு நிலைக்குத் தள்ளியது, இந்திய அமைதிப்படையின் வருகையின்பின் இந்நிலைமையைப் புரிந்துகொண்டும், எமது மக்களின் அபிலாசைகளைப் புரிந்துகொண்டும், யதார்த்த நிலைமைகளிலிருந்தும் எமது மக்களின் உரிமைகளுக்காக [illegible] லும் நிலைமை முன்னேறிவருவதைக் காணச் சகிக்காத அரசு, ஒப்பந்தத்திற்கு முரணாக ஒருதலைப்பட்சமாக இந்திய அமைதிப்படை வெளியேறவேண்டுமென அறிவித்துள்ளது.

இந்நிலையில் எமது மக்களினதும், மாணவர்களினதும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் வரையில் அமைதிப்படை வடக்கு-கிழக்கு மண்ணைவிட்டுச் சாதாரணமாக வெளியேறிவிட முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும்.''

### கொத்தணி அலுவலகம் திறக்கப்பட்டது

(சுன்னுகம்)

உடுவில் கொத்தணிப் பாடசாலைகளைச் சேர்ந்த கொத்தணி அலுவலகம் அண்மையில் சுன்னுகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன், கல்வி அதிகாரிகள், மருதனுமடம் கோட்டப் பிரிவினுள் அடங்கும் பதினெரு கொத்தணி அதிபர்கள், உடுவில் கொத்தணி அதிபர்கள் உட்பட பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

### பற்றிக்ஸ் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா இம்மாதம் 22ம் திகதி வியாழக்கிழமைகாலை கல்லூரியின் மத்யூ மண்டபத்தில் நடைபெறுகிறது.

யாழ். ஆண்டகை அதி வணக்கத்திற்குரிய கலாநிதி பி. தியோகுப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் யாழ். போதனு வைத்தியசாலை குழந்தைகள் நல வைத்திய நிபுணர் பேராசிரியர் டி. ராமதாஸும் அவரது பாரியார் டாக்டர் திருமதி ஞானும்பிகை ராமதாஸும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்கிறர்கள். திருமதி டாக்டர் ராமதாஸ் பரிசில்களை வழங்குவார்.

நியூசாந்தி யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
பயங்கரக் கராட்டிகள் வாள்சண்டைகள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.
MAJESTIC THUNDERBOLT
(C/scope)

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
சத்தியராஜ்-பிரபு நடித்த
சின்னத்தம்பி பெரியதம்பி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முறைசாராக் கல்விக்கென யாழ். நகரில் வளநிலையம்

## இலங்கையில் அமையும் முதலாவது நிறுவனம்

[யாழ்ப்பாணம்]

முறைசாரக் கல்வியின் வளர்ச்சிக்காக யாழ்ப்பாண கல்வித்திணைக்களத்தில் 'வளநிலையம்' ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இலங்கையில் முதன் முதலாக அமைக்கப்படவுள்ள இந்தநிலையத்துக்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையைவிட்டு விலகிய மாணவர்கள் தமக்குரிய ஒரு தொழிலை தேர்ந்தெடுப்பதற்கு முறைசாராக் கல்வி உதவிவருகிறது. இந்தக் கல்வியில், ஏதாவது ஒரு தொழிலை மாணவர் ஒருவர் கற்கும் பட்சத்தில் அம்மாணவருக்கு தொழிலில் வழிகாட்டுவதற்கு இந்த 'வளநிலையம்' உதவும் எனத் தெரிகிறது. முறைசாராக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்நிலையம் உதவும்.

பாடத்திட்டத்தை தயாரித்தல், தொழிற்கல்வியுடன் சம்பந்தப்பட்ட தமிழ்நூல்களை உருவாக்குதல், ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல் போன்ற பணிகளையும் இந்த 'வளநிலையம்' செய்யும்.

இலங்கையிலேயே முதலில் இந்த வளநிலையத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவி இதனால் ஏற்படும் நன்மைகளை கல்வி அமைச்சு அவதானிக்கவுள்ளதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் வெற்றியளிக்கும் பட்சத்தில் வளநிலையம் ஏனைய பகுதிகளிலும் விஸ்தரிக்கப்படும்.

### பயிற்சிபெற்றவர்க்கு கடனுதவி

இதேவேளை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் செய்யக்கூடிய அறுபது சிறுகைத்தொழில்கள் பற்றிய சகல விபரங்களையும் யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப்பிரிவினர் திரட்டி வைத்துள்ளனர்.

நூலுருவில் உள்ள இந்த விபரங்களை சிறுகைத்தொழில்களை மேற்கொள்ள விரும்புபவர்கள் கல்வித்திணைக்களத்தில் அறிந்துகொள்ளலாம் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைசாராக் கல்விப் பிரிவில் பயிற்சி பெற்று சிறுகைத்தொழில்களை ஆரம்பிக்கவுள்ளவர்களுக்கு தொழிலை ஆரம்பிப்பதற்கு கடனுதவிகளைப் பெற்றுக் கொடுக்கவும் யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப்பிரினர் முயற்சி செய்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முறைசாரக் கல்வி பயின்று பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர்களுக்கு ஹோட்டல் முகாமைத்துவம், வெல்டிங், மேசன், தளபாட உற்பத்தி போன்ற துறைகளில் வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

மேற்படி வேலைவாய்ப்புக்களைப் பெறவிரும்பும் பயிற்சி பெற்றோர் யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்வி அதிகாரியின் அலுவலக விளம்பரப்பலகையில் விபரங்களை அறிந்துகொள்ள முடியும்.

---

## நயினையில் இன்று தண்டிகைத் திருவிழா

[நயினதீவு]

நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்கோவில் தண்டிகைத் திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

இன்று காலை 8 மணிக்கு மூலமூர்த்தி அம்பாளுக்கு அஷ்டோத்தர சங்காபிஷேகமும், 9 மணிக்கு உற்சவ அம்பாளுக்கு வசந்த மண்டபத்தில் தைலாப்பிய அபிஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபனாபிஷேகமும் நடைபெற்று 12 மணிக்குப் பூசை இடம் பெறும். இரவு 8மணிக்கு மின்சார புஸ்பாலங்காரங்களுடன் கூடிய தண்டிகையில் அம்பாள், வியாகர், சுப்பிரமணியர் ஆரோகணித்து வீதியுலா வரும் அருட் காட்சியும் நடைபெறும்.

---

# "நீதிமன்றுகளில்ஒலித்தகுரல் இன்று அடங்கிவிட்டது"

## அமரர் எஸ்.ஆருக்கு நேற்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''நீதிமன்றுகளில் பலவருடங்களாக ஒலித்த குரல் இன்று அடங்கிவிட்டது. நீதிமன்றம் தனது உறுப்பினர் ஒருவருக்கு அவர் மறைந்த காலத்தில் அஞ்சலி செலுத்துவது வழக்கம். ஆனால் இன்று அமரர் எஸ். ஆர். கனகநாயகத்துக்கு அப்படி அஞ்சலி செலுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம்,''

இவ்வாறு யாழ். மாவட்ட நீதவான் திரு. பொ. பாலவடிவேல் நேற்று நடைபெற்ற சட்டத்தரணி எஸ். ஆர் கனகநாயகத்தின் முப்பத்தோராவது நினைவு நாளில் பேசுகை தெரிவித்தார்.

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தலைவர் திரு. பரமேஸ்வரன் தலைமையில் யாழ். திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்கமண்டபத்தில் நினைவுநாள் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

யாழ். நீதிமன்ற நீதவான் திரு, திருநாவுக்கரசு பேசுகையில் 'இன்றையகாலகட்டத்தில் ஒரு மனிதன் எண்பத்தைந்து வயது வரைவாழ்ந்து விடுவதென்பது புதுமையும், அதிசயமும் நிறைந்த ஒன்றாகும். ஆனால் சிரேஷ்ட அட்வகேற் எஸ். ஆர். கனகநாயகம் தனது 85-வது வயது வரை வாழ்ந்து எம்மைவிட்டு மறைந்து போனார். அவர் வாழ்க்கையில் பல அம்சங்களையும் தெரிந்த ஒருவராக சமூக தொண்டனாக வாழ்ந்துமறைந்தார்'' என்றார்.

ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் திரு. எஸ். சிவபாதசுந்தரம் தமதுஉரையின்போது குறிப்பிட்டதாவது, ''திரு. கனகநாயகத்துக்கு இனவாதம் என்றால் பிடிக்காது. அவர் தேசியம் என்ற வகையிலேயே தனது அரசியலைப்பேசிவந்தார். சைவமும் தமிழும் வாழ தன்னாலான பணிகளை திரு. நடேசபிள்ளையுடன் எஸ்.ஆர். கனகநாயகம் இணைந்து செயல்பட்டார்''

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா எஸ். ஆர். கனகநாயகத்தின் உருவப்படத்தை திறந்து வைத்துப்பேசுகையில், தமிழ் மாணவர்கள் சைவசமயத்தைப்படிப்பதற்கு கனகநாயகம் உழைத்தார், 'இந்து போட்' இராசாத்தினத்துடன் சைவப்பாடசாலைகளை வளர்க்க பாடுபட்டார்'' என்றார்.

நீதிபதி பால வடிவேல் எஸ். ஆர். கனகநாயகம் நினைவாக 'கனகாஞ்சலி' என்ற அஞ்சலி நூலை வெளியிட்டுவைத்தார். அதனை திரு. சிவபாதசுந்தரம் பெற்றுக்கொண்டார்.

விழா அமைப்பாளர் திரு. தர்மராசாவும் பேசினார்.

---

# மரண அறிவித்தல்

## திருமதி ரேசலின் அந்தோனிப்பிள்ளை

திருமதி ரேசலின் அந்தோனிப்பிள்ளை (10-6-89) அன்று காலமானார். அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிங்கராசா அந்தோனிப்பிள்ளையின் அன்புமனைவியும், ஞானப்பிரகாசத்தினதும், காலஞ்சென்ற நேசத்தினதும் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றசிங்கராசாவினதும்,ராசம்மாவினதும்அருமைமருமகளும் செல்வராசா ஜோசப் (Post Master C. M. E. Colombo) காலஞ்சென்ற மலக்கியாஸ் ஜெயம் ஆகியோரின் அன்பு சகோதரியும், புனிதம், கில்வின் (Engineer U. K.), பெனிட்டா (France), மெற்றீனா (Canada), சுசி (Switzaland), டொரெக்ஸ், மதி, யூட் (Canada), ரெமி (Canada), ரொசிஸ்டன் (St. Patricks College, Jaffna) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணரெத்தினம் (Managing Director, G.P.N. Construction Company Ltd), மனோகரன் (France), மரியநாயகம் (Canada), விஜயரெட்ணம் (Switzaland) ஆகியோரின் அருமைமாமியாரும், நன்சி, நர்கிஷ், சயிலஜா, சஞ்சுதா, அன்ரன், அனூரியன் ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை காலை (17-6-89) 11-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து அச்சுவேலி புனித. சூசையப்பர் சேமைக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் இதை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. S. J. குணரெத்தினம்

''ரேஸ் மஹால்'',
அச்சுவேலி.

(சி 2959)

---

### விரிவுரைகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று விரிவுரைகளை [illegible] தனர்.

---

# இ. போ. ச. ஊழியர்கள் 3-வது தினமாக வேலைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரதுச் சபை ஊழியர்கள் நேற்று மூன்றாவது தினமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நேற்று 300 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

பஸ் சேவை சீர்குலைவினால் பொதுமக்கள் போக்குவரத்துப்பாதிக்கப்பட்டபோதிலும் தனியார் பஸ் சேவைகளினால் மக்களின் பாதிப்பு ஈடுசெய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் 50 பஸ்0கள் சேவையில் ஈடுபட்டிருந்தன. ஆனால் நேற்று 300 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன.

---

### யாழ். ஐந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்கதவு சேதமடைந்திருந்தது.

அரைமணி நேரத்தின் பின்னர் நகரின் ஒரு பகுதியில் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட போதிலும் சேதம் ' எதுவும் ஏற்படவில்லை. இரவு எட்டரை மணிக்குப் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

---

### கூட்டுறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ச. வேலாயுதம்பிள்ளை அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கூட்டுறவு அபிவிருத்திஉத்தி உத்தியோகத்தர் பொது முகாமையாளர்களின் மகாநாட்டில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு அவர் கேட்டுக்கொண்டார். இம்மாநாடு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலைக்குச் சென்று பொருட்களை எடுத்துவருவதில் தொடக்கத்தில் சில தாமதங்கள் தடங்கல்கள் இருப்பதாலும் விரைவில் அவை சீராகி விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

### மாணவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர், ஊழியர், மாணவர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''அண்மைக் காலங்களில் தொடர்ச்சியாகப் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் பல மாணவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளது,

''மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி நிறுவன ஊழியர்கள் மீதான தாக்குதல்கள், துன்புறுத்தல்கள், கைதுசெய்தல் நடவடிக்கைகள் பரவலாக நடைபெறுகின்றன. மாணவிகள் கைதுசெய்யப்படுவதும்கூட நடைபெறுகிறது.

''இக்கட்டத்தில் பல்கலைக்கழகம் இவ்வாறான பிரச்னைகளுக்கு நாம் ஒன்றிணைந்து முகம் கொடுக்க வேண்டும் எனும் வகையில் ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர் ஒருங்கிணைந்த, பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்துச் செயலாற்றிவருகிறது. பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பிற்கு இவ்வாறான ஆசிரியர்-மாணவர்-பெற்றோர் ஒருங்கிணைந்த அமைப்புகளின் உருவாக்கத்தின் மூலமே அடித்தளம் இடப்படலாம். மக்கள் தமதுதகைமைக்கேற்ப ஒருங்கிணைந்த முறையில் நிறுவன ரீதியாக எதிர்ப்பைக் காட்டுவதன் மூலமே ஜனநாயகச் சூழல் உருவாக்கப்படலாம் அது கேட்டுப் பெறுவதொன்றல்ல. எமது உள்ளார்ந்த பலத்தை ஐக்கியப்பட்டு வெளிக்கொணருவதின் மூலம் தான் நாம் எம்மைப் பாதுகாக்கலாம். இதனடிப்படையில் அண்மைக் காலங்களில் நடைபெற்ற சம்பவங்களை விசாரிக்க, மேற்படி உருவாக்கப்படும் குழுக்கள்நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுமல் தடுக்க ஒரு கண்காணிப்புக் குழுவை உடனடியாக அமைக்க நாம் ஆவன செய்யவேண்டும்.''

---

### ஆழியவளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தையடுத்து ஆழியவளை, உடுதுறை ஆகிய இடங்களில் பதற்றநிலை காணப்பட்டது.

ஆழியவளை, உடுதுறை ஆகிய இடங்களிலுள்ள ஆண்கள் பலர் தாளையடிக்கு அழைத்துச்செல்லப்பட்டு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

### மற்றொரு சம்பவம்

இதே நேரத்தில், இயக்கச்சியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது என்றும் அப்பகுதியில் பதற்ற நிலைமை காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது,

### தேடுதல் தீவிரம்

சேவில், நித்தியவெட்டை, முள்ளியான், வண்ணாங்குளம் ஆகிய பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு பரவலாக தேடுதல்கள் இடம்பெற்றன,

---

### யாழ். செயலகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது இவ்வாறிருக்க, யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளும் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதற்கிடையே கொழும்பிற்குச் செல்லும் பிரயாணிகளின் தொகை யாழ்ப்பாணத்தில் நேற்றுக் குறைவாகக் காணப்பட்டது.

ஒரு சில மினிபஸ்களே நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றதாகத் தெரியவருகிறது.

---

### உணவுக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சன்துறைக்கு வருததற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் அக்கப்பல் எதிர்பார்த்தபடி வந்துசேரவில்லை எனத்தெரிகிறது.

இதேவேளை மாவின் விலை யாழ். நகரில் திடீரென அதிகரித்துள்ளது. ஒரு மூடைமா தற்போது அறுநூற்று ஐம்பது ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால் சில்லறை விலை ஒரு கிலோ பதினொரு ரூபா ஐம்பது சதம் எனத் தெரிகிறது.

---

### ஒப்பந்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் பிரதான பொறுப்பு என்று தெரிவித்த பிரதமர்; தமிழ் மக்களின் பாதுகாப்பை மாகாண அரசே பார்த்துக்கொள்ளும் நிலை வரும்வரை இடைநடுவில் அவர்களைக் கைவிட்டு விடுவது நடக்கக்கூடிம் காரியமல்ல என்றும் வலியுறுத்தினார்

''அமைதிப்படையை விலக்கிக் கொள்வது குறித்து பேச்சு நடத்த இந்தியா தயாராக இக்கிறது. ஆனால் இது குறித்து தனியாக பேசமுடியாது. மாகாணசபைக்கு அதிகாரங்கள் வழங்குவது தொடர்பான பேச்சுக்களுடன் இணையாகவே அமைதிப்படை விலகல்பற்றி பேச முடியும்'' என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இந்தியர்களைப் பாதுகாக்க கொழும்புக்கு இந்தியப்படையினர் அனுப்பப்படுவார்களா என்று நிருபர் ஒருவர்கேட்டதற்கு அந்த விடயம் இலங்கை அரசைப் பெறுத்தது என்று பதிலளித்தார்.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper atthe Genenral Post Office Sr iLanka under number B/1003/36/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org